# இது தான் முடிவு

சமூக நாடகம்

இலங்கைக் கலைக் கழக பரிசு பெற்றது.

நாகலிங்கம் இராசரத்தினம்

அன்பளிப்பு

[illegible]

# 'இது தான் முடிவு'

(சமூக நாடகம்)

நா. இராசரத்தினம்

'வசந்தி வாசா'
146/A, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

விலை ரூபா 25. 00

முதற்பதிப்பு : சித்திரை 1990

# "ETHUTHAN MUDIVU"

First Edition : April 1990

Author :

N. RASARATNAM, B. A.
146/A, Temple Road,
Nallur, Jaffna.

Publishers :

" JEYANTHY " Publications,
Nallur, Jaffna.

Printers :

Thiruvalluvar Press,
Nallur.

Price : Rs. 25-00

Sole Distributors :

Poopalasingham Book Depot,
Jaffna.

# இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு

1966-ம் ஆண்டு நடத்திய

நாடக எழுத்துப் போட்டியில்

## இதுதான் முடிவு

நாடகத்தை எழுதி

இரண்டாம் பரிசு பெற்றமைக்கு

## நா. இராசரத்தினம்

அவர்களுக்கு அளிக்கப்படும்

## சான்றிதழ்

135, தர்மபால மாவத்தை
கொழும்பு - 7
16-12-1966

சு. வித்தியானந்தன்
தலைவர்



கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவினரது நான்கு நாள் நாடக விழா ஹவ்லக் மண்டபத்தில் ஆரம்பித்த போது அதனைத் தொடக்கி வைத்த கல்வி கலாச்சார அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஈரியகொல நாடகப் போட்டியில் பரிசு பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரான,

**திரு நா. இராசரத்தினம் அவர்களுக்கு**

பரிசு அளிக்கும் படம்.

தினகரன்
17-12-1966



# சமர்ப் பணம்



'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டிய எனது ஆசான் பேராசிரியர் முன்னாள் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கு

சமர்ப்பணம்.

# முன்னுரை

## ஒரு கால கட்டத்தின் எடுத்துக்காட்டு

## பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

இந்த நாடக எழுத்துருவுக்கு முன்னுரை எழுதுவது முப்பத்தைந்தை வருடகாலத்துக்கு முந்திய பட்டதாரி மாணவக் காலத்து நினைவுகளை மீட்பதாகவும் அமைகின்றது.

இந்த நாடகாசிரியர் திரு. இராசரத்தினம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், எனக்கு ஒரு வருடம் பின் சேர்ந்த என் உடன்சாலை மாணவன். நாங்கள் இருவரும் போரசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்துள்ளோம். வித்தியானந்தனின் தயாரிப்புக்களான 'தவறான எண்ணம்' 'துரோகிகள்' ஆகிய நாடகங்களில் இணைந்து நடித்த நினைவுகள் உள்ளன.

பட்டப் பேற்றுக்குப் பின்னர் நீண்ட காலமாக ஆசிரியராகக் கடமையாற்றி விட்டு, இலங்கையின் முது வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்.மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றுகிறார்.

அவர் மாத்தளையிற் பணி செய்த காலத்தில் மாணவரின் பாட விதானத்துக்கப்பாலான கர்மங்களை (Extra-Curricular interests)வளர்க்க எழுதிய ஒரு நாடகம் இப்பொழுது அச்சிடப்படுகின்றது.

நண்பர் இராசரத்தினத்துக்கு என் வாழ்த்துக்கள்.

முன்னர் பாடவிதானத்துக்கு அப்பாலானது என்றிருந்த ஒரு கலை ஈடுபாடு, இப்பொழுது பாட விதானத்தின் அங்கமாகியுள்ளது. நாடகமும் அரங்கியலும் இப்பொழுது கல்விப் பொதுத்துறை (உயர்தர) த் தேர்வுக்கான பாடங்களில் ஒன்று.

ஒரு கலைவடிவம் 'பாடம்' ஆகின்ற பொழுது என்ன நிகழ்கின்றது என்பது முக்கியமான வினவாகும்.

குறிப்பாக, கலை, மனிதரியல் (Arts and Humanities) துறைகளில் வரும் பாடங்கள் மாணவர்களிடையே மானுடப் பெறுமானங்களை, அழகுத் தேடல்களை, கலைவழியான சமூக மயவாக்கத்தை வற்புறுத்துவனவாக அமைதல் வேண்டும். மனித நாகரிகத்தை, மனிதனின் கலைப்பாந்துதல்களை அரங்கினதும் அதன் விஸ்தரிப்புக்களினதும் (Theatre and its extensions)வாயிலாக அறியும் முயற்சி நாடகக் கல்வி வழியாக மேற்கொள்ளப்படும். 'விஸ்தரிப்பு' என்பதனுள் வானொலி. ரெலிவிசன் என்பன வரும். 'அவை அரங்கின் மறுகளங்களே' சினிமா அரங்கின் மறுகளங்களுள் ஒன்று என்பது ஒரு முக்கியமான சிக்கலான வினவாகும்.

ஆனால் தமிழ் நாட்டின் நவீன மயவாக்கம் வந்த முறைமை காரணமாக, நவீன தொழினுட்பச் சாதனமான சினிமா, தனது சனரஞ்சகத்தன்மை கவர்ச்சி காரணமாகப் பரந்துபட்ட நிலையில் நாடகத்துக்குப் புத்துயிரூட்டியது. மரபுவழி நாடகத்தின் வரையறைகளிலிருந்தும், கால முரணான பயில் முறைகளிலிருந்தும் விடுபட்டதும், நவீனமய ப் பாட் டு க் கு இடமளிப்பதுமான ஒரு 'சனநாயகக் கலையீடுபாட்டை (ஆர்வமுடைய எவரும் ஈடுபடலாக) ச் சினிமா வழி வந்த தமிழ் நாடகம் சனரஞ்சகப்படுத்திற்று.

சனரஞ்சகமான கலையீடுபாட்டுக்கு இடம் கொடுத்த அதே வேளையில், இந்த நாடகங்கள் சமகாலச் சமூகம் பற்றிய விமர்சனங்களாகவும் கொள்ளப்பட்டன. சற்று மிகைப்படுத்தப்பட்ட ஒரு புடைச் சார்பான நோக்கு நிலைப்பட்டவை என்பது உண்மையெனினும், இந்நாடகங்களில் ஒரு விமர்சன உள்ளீடு இருந்தது இளைஞர்கள். இவ்வகை நாடகங்களில் ஈடுபடுவதற்கு அதுவும் காரணமாயிற்று. நிஜவாழ்க்கையில் கூறமுடியாதனவற்றை நாடக மேடைப் பாத்திரமாக நின்று கூறமுடிந்தது.

இந்தச் சமூக விமர்சனப் பார்வை தமிழ் நாட்டினுள் திராவிட முன்னேற்றக் கழக வழி வந்ததாகும். அதற்கான ஒரு மொழி நடை கூடவிருந்தது. அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரின் நாடகங்கள் இவ்வுண்மைகளை விளக்கும் படைப்புக்களாகும்.

உண்மையில் இன்று (1980, 90களில்) நிலவும் மீளக் கண்டு பிடிக்கப் பெற்ற சுதேச அரங்கக் கலை (The rediscouered indigenous Theatre)பற்றிய தேடலுக்கு இந்தசினிமா வழி வந்த நாடக மரபே காரணமாயிற்று:

இந்தச் சினிமாவழி வந்த நாடக மரபுக்கு ஒரு மேடைட்டுப் பிரார்ஹிதம் உண்டு. மேடைகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் வளர்க்கக் கொள்ளப் பெற்றதும், வணிகத் தேவைகளைப் பூர்த்தி செய்ததுமான 'நன்கமைக்கப் பட்ட நாடகம்' ("The Well made plav") என்று கொள்ளப்பட்ட அமைப்பின் சனரஞ்சகத் தமிழ் வடிவமே இந்த நாடகம். கதாநாயகன், வில்லன், துன்பம், இன்பம், நல்லது, கெட்டது, சிக்கல், விடுவிப்பு, பிரச்சனை, தீர்வு, என்ற எளிமைப்படுத்தப்பட்ட ஒரு வாய்பாட்டுச் சட்டத்துள் மனித முரண்பாடுகளைச் சித்திரிக்கும் நாடக அமைப்பாகவே இது வளர்த்தெடுக்கப்பட்டது.

தமிழ் நாட்டின் சமூக சனநாயக மயப்பாடு முன்னிடத் தொடங்கியதும் பெரும்பாலான அடிநிலைமட்ட இளைஞர்கள் இந்த நாடக வடிவத்தினையே தமது ஆர்வத்துக்கான கலைவடிவமாகக் கொண்டனர்.

பின்னர் இந்தக் கலைவடிவத்தின் போதாமைகள் உண்மையான தமிழ் நாடக வடிவம் பற்றிய தேடலுக்கு இடமளித்தன. பேராசிரியர் வித்தியானந்தனின் வரலாறு இதற்குச் சான்று.

நண்பர் இராசரத்தினத்தின் இந்த நாடகம் இதுவரை பார்த்த நாடக வடிவத்தின் செம்மையான ஓர் உதாரண மாகும் அந்த நாடக வடிவத்தின் அலங்கோலமான அமிசங் களை விடுத்து, அதன் கட்டுக்கோப்புக்களை நன்கு (இலக்கண சுத்தமாக) வெளிக்கொணரும் நாடகம் இது.

அந்த அளவில் இந்த நாடகம் இலங்கையில் தமிழ் நாடக வரலாற்றுக்கான மூலச் சான்றுகளில் ஒன்றாகின்றது.

நாடகம் பற்றிய கண்ணோட்டங்கள் மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில், ஒரு காலகட்டத்தின் உதாரணமாக அமையும் இந்த நாடகத்தை வெளியிடும் நண்பர் இராச ரத்தினத்துக்கு என் வாழ்த்துக்கள், நன்றிகள்.

12.03.1990

# ஆசியுரை

**செல்வி தி. பெரியதம்பி (பிரதிக்கல்விப் பணிப்பாளர்)**

முத்தமிழில் ஒன்ருக வைத்துப் போற்றப்படும் நாடகக் கலை, அளிக்கைக் கலைகளில் முதன்மை பெறுவதில் வியப்பில்லை. இயல், இசை ஆகிய மற்ற இரு கலைகளும் இதிற் சங்கமிக்கின்றன. எனவே நாடகக் கலைக்குத் தனிச் சிறப்பு உண்டு. தமிழில் நாடகத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் ஆடியோர் பற்றிய தகவல்கள் இங்கொன்று அங்கொன்ருகக் கிடைப்பினும் ஆடப்பட்ட நாடகங்கள் பற்றிய தரவுகள் காணப்படாமை எமது துரதிர்ஷ்டமே இதனுல் எமது பாரம்பரியத்தின் தேடுதல் தறுக்கணித்த ஒரு நிலையிலேயே உள்ளது.

இருந்தும் தமிழ் நாடகத் துறையின் வளர்ச்சி தேங்கி விடவில்லை. உலக நாடக அரங்கின் வளர்ச்சியைச் செமிப்புறச் செய்து வந்துள்ளமை நாம் அறிந்ததே. 'பார்சி' நாடக மரபின் வழியாக எமது இசை நாடகங்களும். மேற்கத்தைய நாடக முறைமைகள் வழியாக இன்றைய தமிழ் நாடகவரங்கும் வளர்ச்சி பெற்றுள்ளமை வரலாற்று உண்மைகளூ..

இன்றைய தமிழ் நாடகத் தயாரிப்பாளர்கள் மோடியுற்ற நாடகங்களையே பெரிதும் விரும்பி எழுதித் தயாரிப்பினும், இதற்கு முந்திய காலகட்டத்தில் நேர் நாடகங்கள் என அழைக்கப்பட்ட 'மெய்ம்மை' நாடகங்களே தமிழ் நாடக அரங்கில் கோலோச்சி வந்தன. இவ்வடிவத்தைப் பயன்படுத்திப் பல நாடகாசிரியர்கள் தனி மனிதர்களிலும் சமூகத்திலும் காணப்படும் பல்வேறு முரண்பாடுகளை மேடையில் சித்தரிக்க முற்பட்டனர். இதன் காரணமாக இந் நாடக வடிவத்தின் பரிமாணம் அகன்றது. நாடக மேதையான பேனுட் ஷோ நாடகம் பற்றிக் குறிப்பிடுகையில். ''அது ஒரு அறிவுக் களஞ்சியம், மனச் சாட்சியின் உந்துகோல், சமூக நடத்தைக்கான வழிகாட்டி, மனிதனின் பெருநிதிக்கோயில்'' என வர்ணிப்பது இவ் வடிவத்தின் பல்துறை வளர்ச்சிப் படி நிலை பற்றியதே என்பது நோக்கற்பாலது.

பேணாட் ஷோவின் வழியில் காலஞ்சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் அங்கதச் சுவையும் சிந்திக்கத் தூண்டுவதுமான பல நாடகங்களை எழுதி எமது தமிழ் நாடக அரங்கைச் செழுமையுறச் செய்தார். அவரது மாணவராகிய காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் அந் நாடகங்களை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தயாரித்து மேடையேற்றி வெற்றி கண்டார். அந்த நாடகங்களிலே இந் நாடகாசிரியரும் நடித்துள்ளார் என அறிந்த போது நான் வியப்படையவில்லை. நாடகக்கலையில் ஊறித் திளைத்த ஒருவரின் கைவண்ணத்தை 'இது தான் முடிவு' என்ற இந்நாடகத்தில் கண்டேன்.

இந் நாடகத்தைப் பார்த்த போது மனிதனின் நடத்தைகளின் முரண்பாடுகளையும், அவன் அழிவுக்கு அவனது நடத்தைகள் காரணமாய் அமையும் பாங்கினையும் அறிந்து கொண்டேன். இந் நிகழ்வை ஏழு காட்சிகளைக் கொண்ட ஓர் நாடக வடிவத்தில் நாடகாசிரியர் சுவைபடத் தந்துள்ளார். பொதுவாகப் போதிய நாடக எழுத்துருக்கள் தமிழில் இல்லை என்ற குறைபாடு நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. இக் குறைபாட்டைப் போக்கும் வகையில் அண்மைக் காலத்தில் சில நாடகங்கள் அச்சுருப் பெற்றுள்ளன. அவ்வரிசையில் இந் நாடகத்தை அச்சுருவேற்றிய நாடகாசிரியர் பாராட்டுக்குரியவர். தமிழ் நாடகச் சுவைஞர்கள் இம் முயற்சியைப் பெரிதும் வரவேற்று ஊக்குவிப்பார்கள் என்பது திண்ணம்.

திரு. இராசரெத்தினம் அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து இன்னும் பல நல்ல நாடகங்களை எமக்கு எழுதித் தரவேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1990-03-19

## 'சிரிக்கவும் அழவும் செய்த நாடகம்

சமுதாயத்தை நிலைக்களனாகக் கொண்ட கதை அமைப்புடன் இராமசாமி முதலியார் வீடும் வட்டிக் கடையுமாகிய ஒரே செட்டில் இரண்டு மணித்தியாலத்துள் நடந்து முடிந்தது 'இது தான் முடிவு'

இக் கதையின் வசன அமைப்பில் வெறும் ஆடம்பரமான அடுக்கு மொழியும் ஆவேசக் கூச்சல் களும் அற்று வசனம் அமைதியுடன் செல்கின்றது. இயல்பான பேச்சுத் திறன் நாடகத்திற்கு வலுவூட்டுகின்றது.

சிரித்துக் கொண்டும் அழுது கொண்டும் பார்த்த நல்ல நாடகம் இது தான் முடிவு.

'ஷாக்கோ'
வீரகேசரி.
4. 8. 66

## இது தான் முடிவு

மாத்தளை புனித தோமையார் கல்லூரி நூல் நிலைய நிதிக்காக சென்ற மாதம் இது தான் முடிவு என்ற நாடகம் மூன்று முறை மேடையேற்றப் பட்டது. மாத்தளையில் முன்பு மேடையேற்றப்பட்ட நாடகங்களுள் மக்களின் பாராட்டைப் பெற்ற இந் நாடகத்தின் கதை வசனங்களை எழுதிய ஆசிரியர் என், இராசரத்தினம் பி.ஏ. பிரதான பாத்திரத்தையும் ஏற்று நடித்தார்.

ஒரு நாடகத்தின் வெற்றிக்கு சிறந்த கதையே முக்கியமாகக் கொள்ளப்படும் இந் நாளில் ஒரு சாதாரண கதையை வைத்துக் கொண்டு சிறந்த நாடகத்தை அமைத்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந் நாடகம் முதலியாரின் வட்டிக்கடையும் வீடுமாகிய ஒரே செட்டில் இரண்டு மணித்தியாலங்களில் கவர்ச்சியாக நடைபெற்றது. காட்சிகளை உடனுக்குடன் தொடர்பு படுத்தி விட்டமை நாடகத்தின் சுறு சுறுப்புக்கு அடிகோலியது. இந் நாடகத்தில் மறக்க முடியாத அம்சம் பிற நாடகங்களில் நகைச்சுவை என்ற பெயரில் பேசப்படும் 'அருவருப்பான' ஆபாசமான வசனங்களைத் தவிர்த்திருந்தமை பாராட்டப்படக் கூடியதாகும். பொதுவாக நாம் சிரித்துக் கொண்டும் சில காட்சிகளில் அழுது கொண்டும் பார்த்து ரசித்த நல்ல நாடகம் 'இது தான் முடிவு'

ஹம்சன்
செய்தி வார இதழ்
8. 8. 66

மாத்தளை புனித தோமையார் கல்லூரியில் 23.7.66ல் ''இது தான் முடிவு ''என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது.

இந் நாடகத்தில் இராமசாமி முதலியாராக நடித்த ஆசிரியர் இராசரத்தினம் மிக இயற்கையாக உணர்ச்சி பீறிடும்படி நடித்தார்.

கணக்கப்பிள்ளை பொய்யா மொழியாக நடித்த ஆசிரியர் எஸ். அருணாசலம் சிறந்த நகைச்சுவை நடிகர் என்பதை பல கட்டங்களில் நிரூபித்து விட்டார் முதலியார் சொல்பவைகளுக்கெல்லாம் உடுக்கடிக்கும் கையாளாக காட்சியளிக்கும் வேளைகளில் அவர் நடிப்பு அபாரம்.

முதலியாரின் பங்காளியாக இருக்கும் மரைக்கார் பாத்திரம் ஏற்ற ஆசிரியர் எஸ். செபஸ்தியன்பிள்ளை முதலியாரின் இரண்டாம் தாரம் பற்றி விடுத்து விடுத்துக் கேள்வி கேட்ட வேளைகளில் சபையோர் குலுங்கக் குலுங்கச் சிரித்தனர். முதலியார் ஏய்த்து விட்டார் என்பதை உணர்ந்து சினங் கொண்டு கொந்தளித்த வேளை சினத்தின் உச்சிக்கே சென்று விட்டார்.

பானு! சிங்காரம் பாத்திரங்கள் தாங்கிய ஆசிரியர் கணேசன்' மொஹிதீன் ஆகியோர் அளவாகத் தமது பாத்திரத்தை உணாந்து நடித்தனர்.

முனியன் பாத்திரம் தாங்கிய செல்வன் முத்துக்குமார் மிக அருமையாக நடித்து முன்னணி நடிகரென நிரூபித்து விட்டார்.

இராமசாமி முதலியாரின் மனைவியாக நடித்த திருமதி சந்திராதேவியின் அடக்கமும் தம்பியால் தூண்டப்பட்ட

பின் காட்டிய அட்டகாசமும் அவர் ஒரு அனுபவ நடிகை என்பதைக் காட்டின. அவரது எடுப்பான தோற்றம் அந்தப் பாத்திரத்துக்கு மெரு கூட்டியது. மற்றைய உப பாத்திரங் களின் நடிப்பில் குறைகள் எதுவும் இல்லை.

ஒரே செற்றில் நடப்பதாக மதிநுட்பத்துடன் எழுதப் பட்ட இந் நாடக ஈழத்தில் தமிழ் நாடக உலகு உயர் நிலை எய்துகிறது என்பதை காட்டுவதாக அமைந்துள்ளது இதன் கதை வசன கர்த்தாவும் இயக்குனரும் ஆன திரு என். இராசரத்தினம் பி. ஏ. அவர்களின் அற்புத ஆற்றல் நாடகம் முழுவதும் இழையோடுகிறது.

**குரும்பைக் கூத்தன்.**
வீரகேசரி 4-8 66



காட்சி 1ல் வரும் ஒரு கட்டம்



காட்சி 2ல் வரும் ஒரு கட்டம்



## நாடக காட்சிகள்



## காட்சி 2ல் வரும் கட்டங்கள்



## காட்சி 7ல் வரும் ஒரு கட்டம்



# என்னுரை

எனது நாடகத்துறை ஈடுபாட்டிற்கு ஒரு நீண்ட பின்னணி உண்டு. கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் 1947 ம் ஆண்டுக் காலப்பகுதியில் கலையரசு சொர்ணலிங்கத்தின் "சகுனி" நாடகத்தில் சிறு பாத்திரத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதன் பின் பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலப்பகுதியில் 1955, 56 களில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையினால் எழுதப் பட்டு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களினால் தயாரிக்கப் பட்ட "சுந்தரம் எங்கே" போன்ற நாடகங்களில் அமரர் பேராசிரியர் கைலாசபதி இன்றைய யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவுத் தலைவர் பேராசிரியர் கா சிவத்தம்பி போன்றவர்களுடன் சிறு சிறு பாத்திரங்கள்களில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இக்காலகட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியில், பழைய மாணவர் சங்க விழாவில் DRO திரு. சிவஞான சுந்தரத்தின் நாடகமாகிய "புரோக்கர் கந்தையா" என்ற ஓரங்க நாடகத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்த எனது நடிப்பாற்றலைக் கண்ட திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் இலங்கை வானொலியில் கிராமிய தொடர் நிகழ்ச்சியில் தொடர் நாடகமாக ஒலிபரப்பாகிய அவரது நாடகத்தில் நடிப்பதற்குச்சிபார்சு செய்தமையினால் அன்றைய இலங்கை வானொலி நாடகத்துறைப்

பொறுப்பாளர் 'சா' அவர்கள் (சண்முகநாதன்) எனக்கு நடிப்பதற்குச் சந்தர்ப்பம் தந்தார் ஓராண்டு காலம் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் சிவத்தம்பியுடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்ட நான் மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் ஆசிரியனாகக் கடமையாற்றிய காலத்தில் கலையார் வம் மிக்க மாத்தளை தமிழ் உயர் வகுப்பு மாணவர் களின் வேண்டுகோளுக்கு இணங்க எழுதப்பட்டது தான் 'இது தான் முடிவு' இந் நாடகத்தில் மாண வர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து நடித்தோம். மலை நாட்டு மக்களின் கலையார்வம் காரணமாக 1966ல் மாத்தளை, கண்டி போன்ற இடங்களில்பல தடவைகள்இந் நாடகம் மேடையேற்றப்பட்டது.

யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியனாக பதவி யேற்ற பின் 1974 ம் ஆண்டு கல்லூரியில் முதல் முதலாக கலா மன்றம் ஒன்றை ஆரம்பித்து அதன் சார்பில் மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து நடித்த இந் நாடகம் யாழ் வீரசிங்க மண்டபத்தில் என்னால் மேடையேற்றப்பட்டது. அன்றைய அதி பர் அமரர் E K சண்முகநாதன் எனக்களித்த ஆத ரவையும் உற்சாகத்தையும் என்றென்றும் மறக்க முடியாது. அவர் அதிபராக இருந்த பொழுது எத் தனையோ தடவைகள் என்னை அழைத்து கலைக்கழகம்

பரிசு பெற்ற இந் நாடகத்தை நூலாக வெளியிடும்படி வேண்டினர். காலம் கை கூடவில்லை. பரிசு பெற்று 24 ஆண்டுகள் கழித்து இப்பொழுது தான் வெளியிடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

அணிந்துரை தருமாறு கேட்ட போது உடன் தந்த எனது நண்பர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு எனது மனமார்ந்த நன்றி. மேலும் இந் நூலை வெளியிடுவதற்கு ஊக்கம் தந்த அன்பர்கள் யாவர்க்கும் எனது நன்றிகள்

இந்நூலை அச்சிட்டு உதவிய நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

நா. இராசரத்தினம்
நல்லூர், யாழ்ப்பாணம்.

| பக்கம் | வரி | பிழை | பிழை திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 2 | வேண்டியாதாக | வேண்டியதாக |
| 14 | 10 | இன்றும் | இன்னும் |
| 14 | 16 | விளையாடுகிறீர்கள் | விளையாடுகிறார்கள் |
| 19 | 9 | கேட்டக | கேட்ட |
| 20 | 10 | நாளச்சு | நாளாச்சு |
| 22 | 15 | ஏதில் | ஏதோ |
| 23 | 1 | றோஸ் | றோஸ்ற் |
| 27 | 8 | வாடப்பா | வாடர்ப்பா |
| 35 | 16 | மேசைலிருருந்து | மேசையிலிருந்து |
| 37 | 20 | சொன்னமாறி | சொன்னமாதிரி |
| 38 | 14 | கொள்ளுகிறீாகள் | கொல்லுகிறீர்கள் |
| 44 | 24 | வாள் | வால் |
| 45 | 21 | தனிமையாக | தன்மையாக |
| 48 | 20 | மகனாடா | மகனடா |
| 49 | 12 | அறிவிழந்து | அறிவுதெளிந்து |
| 51 | 6 | கடத்திலில் | கடத்தலில் |
| 51 | 7 | பூதமாதிரி | பூதம்மாதிரி |
| 54 | 19 | பாடியாத | படியாத |

இலங்கையின் மலே நாட்டு தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையை பின்னணியாக வைத்து ஒரே அரங்க அமைப்பில் கதை நிகழ்வதாக எழுதப் பட்ட சமூக நாடகம்

## 'இது தான் முடிவு'

## பாத்திரங்கள்

**இராமசாமி முதலியார்**

பசுத்தோல் போர்த்த புலி இவரைப் போல் மலே நாட்டில் ஆயிரம் ஆயிரம் பேர் உண்டு ஏழுமலே எஸ்ரேற் சொந்தக்காரரர் வட்டிக்கடை முதலாளிபெரிய முருக பக்தர் கடத்தல் பேர்வழி வாழ்க்கையின் குறிக்கோள் பணம் திரட்டல். உண்மையான வயது 75. 65 எனச்சொல்லிக் கொள்வதில்பெரு விருப்பு சிற்றின்பம் அனுபவிக்க துடியர்த் துடித்து இளம் ஏழைப்பெண் மீனட்சியை இரண்டாந்தாரமாகக் கட்டிக் கொண்டவர்

**மீனட்சி**

ஏழை அனுதை இளம் பெண். வயது 25. இராம சாமி முதலியாருக்கு இரண்டாந்தாரமாக வாழ்க் கைப்பட்டவள். தம்பி சிங்காரத்தின் புத்திமதிக ளைக் கேட்டுகுடும்பத்தையே சீர்குலைத்து விட்டாள்

**கணக்கப்பிள்ளை பொய்யாமொழி**

பெரிய குடும்பஸ்தர் ஏழை இராமசாமி முதலி யாருக்கு ஏற்ற கணக்கப்பிள்ளை

சிங்காரம்

மீனாட்சியின் தம்பி வாழ்க்கையில் சுகமே அனுபவிக்காதவன் குறுக்கு வழியில் சுகம் அனுபவிக்கத் திட்டம் வகுத்தான் வெற்றி பெற்றான் முடிவு குடும்பம் சீர்குலைந்தது

பாலு:-

முதலியாரின் மூத்த தாரத்தின் ஒரே ஒரு மகன் நல்லவனாகத் தான் இருந்தவன் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவனை மாற்றி விட்டது. நம்மிடையே இன்று காணப்படும் ஆயிரம் ஆயிரம் பாலுக்களில் இவனும் ஒருவன்.

முனியன்

ஏழைத் தோட்டக் கூலி இலட்சக்கணக்கான கூலிகளில் இவனும் ஒருவன் பசுத்தோல் போர்த்த புலிகளால் ஏமாற்றப்பட்ட ஏழைகளில் இவனும் ஒருவன்

மரைக்கார்

எழுத்தறிவில்லாத அப்பாவி. வியாபாரி மின்னுவதெல்லாம் பொன்என நம்பி மோசம் போன அப்பாவி,

சாஸ்திரியார்:

இவரைப் போல் ஆயிரம் ஆயிரம் சாத்திரிகள் நம்மிடையே உண்டு அவர்களில் இவரும் ஒருவர்

வருமானவரி அதிகாரி

போலீஸ்காரர் இருவர்

சிங்காரத்தின் நண்பர்கள்

(இந் நாடகத்தில் வரும் பாத்திரங்கள் யாவும் கற்பனை)

# காட்சி I

பாத்திரங்கள்: இராமசாமி முதலியார்
கணக்கப்பிள்ளை
முனியன்
மரைக்கார்
மீனாட்சி
பாலு
சாத்திரியார்

கதைநிகழும் இடம்: இராமசாமி முதலியார் வீடும், வட்டிக் கடையும்.

(இராமசாமிமுதலியார் வீடும் வட்டிக்கடையும்; முருகன் படம், அதற்கு முன்னால் பூசை செய்து கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் கணக்கப் பிள்ளை வந்து தானும் கும்பிட்டுவிட்டு, தனது இருப்பிடத்தில் போய் உட்காருகிறார். பூசை முடிந்து பணப்பெட்டியைக் கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு வந்து கொண்டு)

இ. மு; மீனாட்சி! மீனாட்சி! மணி ஒன்பதாயிற்று; எழுந்து முகத்தைக் கழுவிக் காப்பியைக் குடி அம்மா! போட்டு வைத்திருக்கிறேன்.

(எனச் சொல்லிக் கொண்டு வரும்பொழுது அவரையே கணக்கப்பிள்ளை பார்த்துக் கொண்டு)

க. பி: என்னங்க முதலியார்வாள்; சின்னம்மாவுக்கு ஏதாவது உடம்பிற்கு...... ...

இ. மு: சீச்சீ அதொன்றுமில்லை, பொய்யாமொழி. தெரியாதே புதிசு பாரும். புதிசு. இன்னும் நித்திரையாலே எழும்பவில்லை.

க. பி: அதுதானே நான் கேட்டேனுங்க. நான் பயந்தே போனேனுங்க......

இ. மு: உமக்கு எடுத்ததெற்கெல்லாம் பயந்தானே, அப்பா. அப்பனே முருகா;

(சொல்லிக் கொண்டு தனது மேசையில் இருந்த கணக்குப் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டு)

ஓய் கணக்கப்பிள்ளை! ஓய் கணக்கப்பிள்ளை! ஓய் பொய்யாமொழி! என்னப்பா இழவு? எனக்கு வந்து வாய்ச்சியே, செவிட்டுப்பிறவி?

க. பி: (உரத்து)
என்னுங்க முதலியார்வாள், கூப்பிட்டியளோ' நான் பாருங்கோ அந்த இன்கம்ரக்ஸ் விஷயமாக மண்டையை உடைத்துக் கொண்டிருந்தேன் ... ... .....
அதுதான் ......

இ. மு: (கோபத்துடன்)
என்ரை வீட்டிலே ஏனப்பா மண்டையை உடைக்கிறாய்? இங்கே வாப்பா கிட்ட.

(அவர் வந்து அருகில் நிற்கிறார்)

இதென்னையா எழுதி வைத்திருக்கிறாய்? நூறு தரம் வெட்டிக் கொத்தி? இன்கம்ரக்ஸ்காரன் வந்தால் கம்பி எண்ணுவது நீரோ நானோ? ஏனையா அந்த ஏழுமலை எஸ்ரேற் கணக்கு முடிக்கவில்லை? நகை ஈடு வைத்த வங்களுக்கெல்லாம் பைனல் நோட்டீசு போட்டீரா?

க. பி: வந்து பாருங்கோ முதலியார்வாள்!குடும்பத்தொல்லை பாருங்கோ. என்ரை கடைசி மூன்றுக்கும் சரியான காச்சல், அதற்கு முந்தினது காலை விழுந்து உடைத்துப் போட்டுது. ஆக முந்தினது, அதுதான், சென்தோமஸ்சில் படிக்குதே; ஏதோ; எக்ஸ்கேஷன் போக வேணும்; ரூபாய் 25/- தா தா என்று ஒற்றைக்காலில் நிற்குது. இதைவிடப் பாருங்கோ, என்னுடைய சம்சாரத்திற்கு இரவு முழுக்க ஒரே இழுப்பு. தொய்வு இழுப்பு; இரவு முழுக்க நித்திரையே கொள்ளவில்லை.

இ. மு: ஓய்! உமது வீட்டு விஷயம் யார் கேட்டது? தொல்லையென்றால் வீட்டிலே நின்று தொலைப்பது; இங்கே வந்து என்ரை உயிரை ஏன் வாங்கிறாய்?

க. பி: (தலையைச் சொறிந்து கொண்டு, பெருமூச்சு விட்டுக்கொண்டு)

உங்கள் தப்பில்லை முதலியார்வாள். போயும் போயும் பெத்தேனே பத்து. அதற்குச் சோடியாய் வந்து வாய்த்தாள் தெய்வப் பிறவி, இம். என்ன செய்வது? too late பாருங்கோ.

இ. மு: (இரக்கத்தோடு) இங்கே வாய்யா, அந்த இன்கம் ரக்ஸ் விஷயம் இருக்கேஅதை முடிக்க வேண்டுமய்யா எஸ்ரேற் செலவைக் கூட்டி எழுதி நட்டங் காட்டையா நட்டம், அதோடை ஏழுமலை எஸ்ரேற் ஆயிரம் கூலிகளுக்கும் நூறு ரூபாய் வீதம் போனஸ் கொடுத்ததாக எழுதிவிடப்பா. ரூபாய் பத்தாயிரம் வரியிலிருந்து தப்பும்.

க. பி: அதெப்பிடியுங்க முடியும்?

(என்று தலையைச் சொறியிறார்)

இ. மு: உம்முடைய பெயரை மாத்தி வையப்பா. பொய்யாமொழியாம், பொய்யாமொழி. இங்கே வாய்யா.

ஆளுக்கு ரூபாய் பத்துக்கொடுத்து 100க்கு போனஸ் வேண்டியாதாகக் கை எழுத்து வேண்டய்யா. அவங்க என்ன படித்தவங்களா? பத்தைக் கண்டதும் ஆ என்று வேண்டிவிடுவாங்க.

க. பி: அதற்கில்லே முதலியார்வாள்; அவன் தான் முனியன் இருக்கிறனே, முனியன். அவனைச் சரிக்கட்டமுடியாது. அவன் எஸ்ரேற் ஸ்கூலில் ஐந்தாம் தரம் படிச்சவனுச்சே. அவனுக்கு வாசிக்கத் தெரியுமுங்க.

இ. மு: மடப்பயல் பெத்த மவனே. அவனுக்கு மட்டும் இரண்டு பச்சைத்தாளைக் கூடத்தள்ளிவிடய்யா. எல்லாம் சரியாப்போம்.

க. பி: அபார யோசனே. நீங்க பிறந்த நேரம் பாருங்கோ

(இருவரும் சிரிக்கிறார்கள்

இ. மு: அப்பனே முருகா! எல்லாம் உன் செயல். எடமறந்திட்டேனே பொய்யாமொழி. முருகன் கோயில் கட்டின நிதிக்கு ரூ. 1000/- போட்டிருந்தோமே

க. பி: ஆமாங்க மாதம் மாதம் ரூபாய் 100/- அனுப்புவதாகத் தானே சொன்னேம்.

இ. மு: அந்த ஆயிரத்தையும் இன்றைக்கே அனுப்பிவிடய்யா

(முனியன் வருகிறான்)

மூ ன்: முதலாளி! வணக்கமுங்க. கணக்கப்பிள்ளை ஐயா வணக்கமுங்க!

க. பி: என்ன முனியா விஷயம்?

மூன்: கணக்கப்பிள்ளை ஐயா ஒரு விஷயமுங்க; அதாவது வந்து என்னுடைய சம்சாரத்திற்குச் சரியான காச்சல் ..........

க. பி: அப்ப மாத்தளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவது தானே.

மு ன்: நாங்க அங்கே போனல் சரியாய்க் கவனிக்க மாட்டாங்க. எஸ்ரேற் கூலி என்று ஒருவாறு இழிவாக நடத்துவாங்க. அதுதான் பாருங்கோ, கணக்கப்பிள்ளை ஐயா எங்கடை டாக்குத்தரிடம் கொண்டு போகக் கொஞ்சம் பணந்தேவை.

க. பி: இங்கை என்ன தருமம் கொடுக்கிறுங்களா? வட்டி கடையடா வட்டிக்கடை.

மு. ன்: அது எனக்குத் தெரியுந்தானேங்க அவசரமாக ரூ. 100 வேண்டும். இதை வைத்துக் கொண்டு தாருங்கோ. (ஒரு சங்கிலியைக் கொடுக்கிறுன்) உங்களுக்குப் புண்ணியம் கிடைக்குமுங்க.

க. பி: (சங்கிலியைப்பார்த்துவிட்டு) இதென்ன பவுண்தானே.

மு ன்: என்னையா அப்படிச் சொல்லிறியள். ரூ. 450-/- கொடுத்து போன மாதம் தானே வாங்கினனுன்.

க. பி: சரி சரி நீ போய் முதலாளியைக் கேட்டுப் பார்.

மு. ன்: நீங்கய்யா ஒருகால் சொல்லிவிடுங்கோ.

க. பி: ஓ; நீ முதலே இப்ப போய் அவரைக் கேள்.

மு. ன்: (முதலியாருக்கு முன் வந்து கும்பிட்டு எழுந்து) இதை வைத்துக் கொண்டு நூறு ரூபாய் தாருங்கோ ஈட்டுக்கு.

இ. மு: (ஒரு மாதிரிப் பார்த்து விட்டு) இப்ப வசதியில்லை. நேரமில்லை நான் மாரியம்மன் கோயிலுக்கு சங்காபிஷேகத்திற்கு போக வேண்டியிருக்கு. எதற்கும் நாளைக்கு வா பாப்பம்.

மு. ண்: முதலாளி அப்படிச் சொல்லாதீங்க. சம்சாரத்திற்குச் சரியான காச்சல் வேறு வழியில்லே. நீங்கள் தான். கடவுள் மாதிரி உதவி செய்யவேண்டும்.

இ. மூ: ஏன் உங்க பீப்பிள்ஸ் பாங்க்குக்குப் போவது தானே போ. போ. அங்கே போய் வேண்டு.

மு. ண்: கணக்குப்பிள்ளே ஐயா ஒருக்கா சொல்லி விடுங்கோ

க. பி: முதலாளி இவன் முனியன் இருக்கிறனே. அவன் மற்றவங்களேப் போல் அல்ல நல்லவன். அப்பாவி அவன் எப்பொழுதும் இங்கைதான் வருவான். உதவி செய்து கொடுங்கோ புண்ணியம் கிடைக்கும்.

இ. மு: இங்கே வா முனியா, உன்னுடைய நிலே எனக்குப் புரிகிறது. இப்படியான நேரத்தில் மனிதனுக்கு மனிதன் உதவி செய்யத்தான் வேண்டும். கணக் கப்பிள்ளே அதை வேண்டிக் கொண்டு ரூபாய் நூறு கொடுத்து விடப்பா. ஆனல் ஒரு நிபந்தனே 100 க்கு ரூபாய் 10 மாத வட்டி தர வேண்டும். முதல் மாதம் நீ வட்டி கொடுக்க வேண்டாம். இப்பொழுது 10 ரூபாய் எடுத்துக் கொண்டு கணக்கப்பிள்ளே தொண்ணூறு ரூபாய் தருவார்.

மு. ண்: அதைப்பற்றிப் பறவாய் இல்லே ஐயா. இந்த நேரத்தில் பணந்தருவது பெரிய காரிய மாச்சே.

இ. மு: இன்னும் ஒரு வருடத்திற்குள் நகையெடுத்து விட வேண்டும் ஒரு வருடம் போச்சோ, நகை கிடைக்காது.

மு. ண்: ஐயோ அதற்கு முன் எடுத்துப்பிடுவேங்க

இ. மு: துண்டு தரமாட்டேன். அது தான் றிசீற்.

மு. ண்: நீங்க கடவுள் மாதிரி, ஏன் உங்களிடம் துண்டு வாங்க வேண்டும் ?

இ. மு. கணக்கப்பிள்ளை கொடுத்து விடப்பா பாவம்.

க. பி: (காசைக் கொடுத்து விட்டு)
நாளைக்கு வீட்டுப்பக்கம் வா அம்மா விறகு பிளக்க வேண்டுமென்றுசொன்னவங்க.

மு. ண்: அதற்கென்னங்க (என்று சொல்லி விட்டு இருவரையும் வணங்கி விட்டு வெளியே போனான்.)

இ. மு: (முதலியார் கடிதங்களைப் பார்க்கிறார். ஒரு கடிதத்தைப் பார்த்து விட்டுத் துள்ளி எழுந்து) நல்ல காலம் முருகன் தான் நினைப்பூட்டினான். ஓய் பொய்யா மொழி! இன்றைக்கு எல்லோ எங்களுடைய பாற்னர் மரக்கார் வருகிறார். லாப நஷ்டம் பார்க்க அந்தக் கணக்கெல்லாம் எழுதிப்போட்டீரா?

க. பி: ஓ ஓ. அந்தக் கணக்கு. அது எப்பவோ முடிச்சுட்டேனுங்க.

இ. மு: எங்கே கொண்டுவாய்யா பார்ப்போம். (கொண்டு வந்து கொடுக்கிறார். பார்த்து விட்டு) முருகா! முருகா! (என்று தலையில் அடித்துவிட்டு கால் இரண்டையும் கதிரையில் தூக்கிவைத்துக் கொண்டுதலையில் கைவைத்தபடி பேசாமல் இருக்கிறார்.)

க பி: (விழித்துக் கொண்டு) என்னங்க முதலாளி?

இ. மு: (புத்தகத்தைக் காட்டி) ரூ 50, 000 லாபம் என்று எழுதி வைத்திருக்கிறீரே. உம்முடைய மூளை என்ன கெட்டுப் போச்சா?

க. பி: அந்தக் கணக்கிலே தப்பில்லீங்க. வேணுமின்னு நீங்களே பார்த்துக் கொள்ளுங்க.

இ. மு: அதற்கில்லை ரூ 50, 000 லாபம் என்று எழுதியிருக்கிறீரே. சரிபாதி ரூ25, 000 மரக்காருக்குக் கொடுக்க வேணுமே.

க. பி: கொடுத்தால் போகுது முதலியார்வாழ்

இ. மு: என்ன கொடுக்கிறதாவது கொடுக்கிறதாவது. (கோபமாக) நீர் ஒரு அறிவு கெட்டவன் ஐயா அறிவுகெட்டவன். சம்பளம் கொடுக்கிறது நான் மரக்காருக்கெல்லே பரிந்து பேசுறூர்.

க. பி: அப்படியா முதலியார்வாழ். 50,000 ல் இருக்கும் நாலு சைவரில் கடைசி ஒரு சைவரை வெட்டி விட்டால் போகுது. அப்புறம் 5000 தானே. சரி பாதி 2500 கொடுத்து விடுவோமே.

இ. மு: அப்படிச் சொல்லையா அபபடி. அறிவாளி பெற்ற மகனே. மரக்கார் எழுத்து வாசனையற்றவர். வந்தவுடன் கணக்கா பார்க்கப் போகிறூர். வந்தவுடன் ரூபாய் 2000த்தையும் கையில் வைத்து விட்டால் எல்லாம் சரியாய்ப் போம். ஆறுதலாக கணக்கைப் பார்ப்போம் என்று ஒரு போடு போட்டால் சரி.

க. பி: (தலையைச் சொறிந்து கொண்டு) அப்ப முதலியார்வாழ் நம்ம விஷயமுங்க..... ...

இ. மு: அதென்ன உம்முடைய விஷயம்.

க. பி: அதுதானுங்க ஐந்து ரூபாய் சம்பளம் கூட்டித் தரும்படி கேட்டேனுங்க.

இ. மு: அது கெட்டுது போ. இப்ப இது ஒரு தொத்து வியாதி ஐயா தொத்து வியாதி. என்னையா இது கவன்மென்ற் உத்தியோகமா இன்கிறிமென்ற் தருவதற்கு.

க. பி: அவங்க கொடுத்து வைச்சவங்க.

இ. மு: யாரய்யா கொடுத்து வைச்சவா?

க. பி: கவன்மென்ற் உத்தியோகஸ்தர் வேலையில் சேர்ந்த

நாள் முதல் ஒரே வேலையைத்தான் செய்யிறுங்க, ஆனுல் வருஷம் வருஷம் சம்பளம் கூடிக் கொண்டே போகுது. கூடக்கூட வேலை குறைவு. இங்கே என்ன வென்றுல் Just the opposite

இ. மு: அப்ப நீர் போய் அந்த வேலையைப் பாரும்.

க. பி: கொடுத்து வைக்கவில்லையே. மாடாய் உழைக்க வேண்டுமென்று பிரம்மன் தலையில் எழுதி விட்டான். இனி யாரால் அழிக்க முடியும்? சுடு காட்டிலே தான் அழிக்கலாம்.

இ. மு: போன வருஷம் தானே ஐம்பதில் இருந்து ஐம்பத்தைந்து ரூபாவாய்க் கூட்டித் தந்தனுன். இப்ப என்ன ஐயா கேட்கிறீர்? ஐந்து ரூபாய் அல்ல ஐந்து சதமும் கூட்டித்தர முடியாது. போய் வேலையைப் பாரும்.

க. பி: நான் பிறந்த நேரகாலம் இப்படிச் செய்யுது. (என்று சொல்லிக் கொண்டு போய் கணக்கு எழுதுகிருர்)

இ. மு: (கதவைத் தட்டும் சத்தம்) யாரய்யா அது? வாப்பா உள்ளே. (மரக்கார் குடையோடு வருகிருர்) (முதலியார் எழுந்து) யார் எங்கடை மரக்காரா? வாப்பா வா. உம்முடைய கணக்குத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேம். இரும் காக்கா (என்று சொல்லிக் கதிரையை இழுத்து விடுகிருர்)

ம. க: வணக்கம் முதலியார்வாள் (என்று சொல்லி இருக்கிருர்)

இ. மு: வணக்கம் காக்கா.

ம. க: நாமள் போட்ட கடுதாசி கிடைத்ததோ?

இ. மு: ஓ. ஓ. அதெல்லாம் நேற்றே வந்து விட்டது. அவசரமாய்த் தந்தி அனுப்பினுல் தான் போய்ச்சேராது, அது எங்கள் போஸ்ரல் டிபாற்மென்றின் திறமை.

மாக்: அது தானே கேட்டேன் (மறுபக்கம் பார்த்து) கணக்கப்பிள்ளை, எப்படிச் சுகமா. ?

க. பி: (வெறுப்போடு) அதற்கென்ன குறைச்சல், முதலியார்? அப்ப காக்காவுக்கு ஏதாவது குடிக்க ......

மாக். அதுக்கென்ன இப்ப அவசரம்?

இ. மு: (கதவுப்பக்கம் பார்த்துக் கொண்டு) மீனுட்சி! மீனுட்சி!

மீனு: (உள்ளிருந்து கொண்டு) என்னுங்க ? என்னுங்க ?

இ. மு: மீனுட்சி இவர்தான் எனது பிசினஸ் கூட்டாளி. ஆள் நல்ல காக்கா. அப்பாவீ மனிதன். மிதித்த இடத்துப் புல்லும் சாகாது.

மீனு: வணக்கம் (என்று சொல்லிக் கும்பிடல்)

மரக்: வணக்கம்.

இ. மு: நல்லதொரு கலர் கிளாசிலே கொண்டாம்மா. அதோடே சீனி போடாமல் எனக்கொரு பிளெயின் ரீ. (மீனுட்சி உள்ளே போக மரக்கார் உற்றுப் பார்த்து விட்டு)

மரக் என்ன முதலியார் வாள்? இன்னுள் வரை நம்மள் கிட்டே இம்மட்டு வயசிலே ஒரு பெண் ஈக்கிறதாகச் சொல்லவே யில்லையே?

இ. மு: உஸ், உஸ்; சத்தம் போட்டுப் பேசாதே காக்கா, அது என்னுடைய சம்சாரம். என்னுடைய மனைவி தவறிப் போனது உமக்குத் தெரியும் தானே?

மரக்: ஓ ஓ; நல்லாய்த் தெரியுமே! நல்லாய்த் தெரியுமே! நான் கூட வந்திருக்கேன். நீங்க விழுந்து விழுந்து கத்தினது ..................

இ. மு: நான் பாவி காக்கா பார்வி. அதற்கப்புறம் பல பேரது வேண்டுகோளுக்கிணங்க மீனாட்சியை இரண்டாந் தாரமாகக் கட்டிக் கொண்டேன்.

க. பி: (இடைமறித்து) ஆமாங்க. ஐயா ஒற்றைக் காலில் நின்றுங்க, கலியாணம் வேண்டாமென்று. ஒரு மாதிரிக் கஷ்டப்பட்டு ஐயாவைச் சம்மதிக்க வைத்தோம்.

மரக்: (முதலியாரைப் பார்த்து) நம்மள் கிட்டை சொல்லவில்லையே.

இ. மு: இதெப்படிக் காக்கா சொல்லுவது? இரகசியமாக வைத்துவிட்டேன்.

மரக்: உங்களுக்குப் போய்ப் பொண்ணு கொடுத்தாங்களே? எந்த ஊர்?

இ. மு: என்ன மரக்கார் அப்படிச் சொல்லுகிறீர்.

மரக்: முதலியார்வாள், சும்மா விஷயமறியக் கேட்டேன். தப்பாய் நினைக்காதேயுங்கோ.

இ. மு: அப்படி வாரும் வழிக்கு, தாய் தகப்பன் இல்லை. ஊர் பள்ளப்பலை. அதைத, சாப்பாட்டுக்கே தட்டுப்பாடு. ஒரு தம்பி உண்டு. அது ஒரு தறுதலை. புண்ணியத்துக்காக, பாவம் என்று கூட்டிக் கொண்டேன். எனக்கும் வீட்டிலே தனிய, ஒரு உதவியாக இருக்கட்டும். எத்தனை நாளைக்குத் தான் கடையில் சாப்பாடு சாப்பிடுவது? வேறொன்றும் வித்தியாசமாய் நினைக்காதெயும். கொதிப்பிச்சுத் தின்னத்தான்.

மரக்: உங்களுக்கென்ன குறைச்சல்? ஆனால் வயசுதான் கொஞ்சம் ... ... தங்கபஸ்பம் வேண்டிச் சாப்பிடுங்கோ. எல்லாம் சரியாய்ப் போயிடும்.

இ. மு: அது தான் என்னுடைய யோசனையும். அதோடு ஏழைக்கு வாழ்வளித்த புண்ணியம் கடைசி நேரத்தில் கிடைக்கட்டுமென்று தான்.

மரக்: நீங்க சொல்வது சரியுங்க. நானும் உங்க கட்சி தான். ஆனல் என்ன செய்வது? என்னுடைய சம் சாரம் உயிரோடு ஈக்கே.

(கதைத்துக் கொண்டு இருக்கும் போது முதலியா ரின் மகன் பாலு புஷ்கோட்டும் ஆளுமாக வாயில் சிகரெட் குடித்தபடி வருகிறுர்)

இ. மு: வாப்பா; வா நான் பெற்ற செல்வமே.

மரக்: (உற்றுப் பாத்து விட்டு) முதலியார் வாள்; யார் இது? உங்க மவனு? சிறிசா ஈக்கும் பொழுது கண் டது. எங்கே வேலே பார்க்குது.

இ. மு: ஓ, அவருக்கு நல்ல வேலே. மாதம் இரண்டாயிரம் ரூபாய் செலவாகும். ரோட்டுச் சுற்றுவது தான் வேலே. நான் செய்த பாபமெல்லாம் ஒன்று திரண்டு எனக்குப் பிள்ளேயாய் வந்திருக்கு. இந்தக் கொடு மைகளேப் பார்க்கமால் புண்ணியவதி போய்ச் சேர்ந்து விட்டாள்.

க .பி: அது வந்து பாருங்கோ காக்கா மீனுட்சி அம்மா எப்போ இங்கு வந்தாங்களோ; அதற்கப்புறம் மோசம்.

பாலு: அப்பா உங்களுக்கு Manners தெரியாதப்பா அந்நி யர்களே வைத்துக் கொண்டு இப்படிக் குறை கூற லாமா? நீங்கள் ஒரு சுத்தக் Country.

இ. மு. இங்கிலிஸ் கலந்தெல்லோ பேசுகிறீர். முதலி வீட்டுப் பணம் இதற்கு மேலும் பேசச் சொல்லும்.

பாலு: It is getting late அப்பா. உங்களோடு Private ராக ஒன்று கதைக்க வேண்டும்.

இ. மு: என்னடா பிறைவேற்ராக? என்ன காதல் விஷய மோ?

பாலு: அறுவத்தைந்து வயதில் நீங்கள் தானே.............

இ. மு: என்ன விஷயம் என்று சொல்லு? நேற்றுக் கொண்டு போன ஆயிரம் ரூபாயும் முடிந்து விட்டதோ.

பாலு: நேற்றில்லை அப்பா நேற்று முந்தநாள் அல்லவோ? இப்பொழுது அவசரமாக ரூபா 2000 வேண்டும்.

இ. மு: அடப்பாவி; இரண்டு சதம் தா என்று கேட்கிற மாதிரியல்லோ கேட்கிறான். ஆளைப்பார் ஆளை. படு பாவிப் பயலே! இங்கே என்ன பாங்கா வைத்திருக் கிறேன்? உனக்கு இனி ஒரு செம்புச் செல்லியும் தர மாட்டேன். போடா வெளியே; போ.

பாலு: அப்பா பத்து சதம் செலவழித்து Phone செய்தால் முழுவதும் ஆபேஸ் பின் உங்களுக்குமில்லை, எனக் குமில்லை.

க. பி: தம்பி செய்தாலும் செய்து போடும். முதலியார் வாள். வெள்ளம் வரக்கு முன் அணைபோட வேண் டும். ரூபாய் 2000 கொடுத்து அணையைப் போட்டு விடுங்கள்.

இ. மு: (யோசித்து விட்டு) பாலு! இங்கே வாடா; உனக் கில்லாதது எனக்கேன்? நீ ஒரேயொரு மகன் தானே? உனக்காகத் தானே பாடுபடுகிறேன். எனக் குப்பின் சொத்தெல்லாம் உனக்குத்தானே. இந் தாடா ரூபா 1000/- கொண்டு போ.

பாலு: முடியாது; ரூபா 2000 இப்ப கட்டாயம் வேண்டும்.

இ. மு: கணக்கப்பிள்ளை கொடுத்து விடப்பா.
(பாலு வேண்டிக் கொண்டு வெளியேறுகிறான்.)

மரக்: (வாயில் கை வைத்துக் கொண்டு) இது நீங்க பெத்த மவனா? என்ன பேச்சு! என்ன பேச்சு! என்ன மரி யாதை.

இ. மு: என்ன செய்வது? தலைவிதி. சரி சரி, நேரம் போகிறது. அது போகுது கழுதை. என்ரை கழுத்தை அறுக்கிறதென்று நிற்கிறது. ஊம். அறுக்கட்டும். நீர் வந்த விஷயத்தைக் கவனிப்போம். (கணக்கப்பிள்ளையைப் பார்த்து) என்ன வீட்டுக்குப் போகப் போகிறேன் என்று கேட்டீர்? போய்விட்டு நாளைக்கு வேளைக்கு வாரும்.

க. பி: என்ன கருணை! என்ன கருணை! (என்று சொல்லிக் கொண்டு வெளியேறுகின்றார்)

இ. மு: மரக்கார் இந்தமுறை பிசினஸ் ஒரே டல் இன்றும் கணக்குப் பார்க்கவில்லை. இப்போதைக்கு இந்த 2000 கொண்டு போம். பின்பு ஆறுதலாகப் பார்ப்போம்.

மரக்: நம்மங்கிட்டே என்ன வித்தியாசம்? நீங்க கடவுள் மாதிரி. நீங்க சொன்னாச் சரிதானே.

இ. மு: வேணுமென்றால் இந்தாப்பா புஸ்தகம்; நீரே பாரும்.

மரக்: என்னங்க விளையாடுகிறீர்கள். முதலியார் வாழ், எனது எழுத்தே பெருவிரல் அடையாளந்தானே. நான் எதைப் பாக்கிறது? நீங்க சொன்னாச் சரி தான். போய் வருகிறேன். (வெளியேறுகிறார்)

இ. மு: சரி போட்டுவாரும். (விசிறிக் கொண்டு என்ன புழுக்கம்? என்ன புழுக்கம்? ஆளையொரு மாதிரி அனுப்பியாச்சு (உள்ளே பார்த்து) மீனாட்சி! மீனாட்சி! ஏதாவது குடிக்கக் கொண்டுவா.

மீனா: (சோடா கொண்டு வந்து வைத்து விட்டு) என்னங்க சீ, தம்பி உரத்துப் பேசி விட்டுப் போகுது. கோபமோ?

இ: மூ: அவன் இப்படித்தானே என்றைக்கும். அது போகுது கழுதை. அதை விடு. சமையல் ஆச்சுதா? என்னைப் பற்றிப் பாராதே. உனக்கு விருப்பமானதைச் சமைத்துச் சாப்பிடு.

மீனு: அதற்கு என்னுங்க குறை? (உள்ளே போகிறாள் (கதவில் தட்டும் சத்தம்)

இ. மூ: யாரது? யாரது? உள்ளே வாப்பா

சாத்தி: (வந்து கொண்டு) அது நான் தான், சாத்திரியார்.

இ. மு: ஒகோ; எங்களுடைய சாத்திரியாரா? வாரும் வாரும். எங்கே இந்தப் பக்கம் கனநாளாய்க் காணவில்லை?

சாத்தி: நான் பாருங்கோ, ஒரு பெரிய யாத்திரை இந்தியாவுக்குப் போயிருந்தேன். அங்கே கோயில் குளம் பார்த்தது அல்லாமல் கைரேகை சாஸ்திர நிபுணர் பிரம்மஸ்ரீ அவர்களிடம் கொஞ்ச நாள் கைரேகை சாஸ்திரம் படித்துக் கொண்டு வந்துள்ளேன்.

இ. மூ: அடே, நல்லதாய்ப் போச்சு, அப்ப என்னுடைய கையை ஒருக்கால் பாரும் சாஸ்திரியார். எப்படிக் கால சுகங்கள் என்று.

சாத்தி: அதற்குத் தானே நான் வந்திருக்கிறேன். நீங்களே கேட்டுப் போட்டியள், நல்லதாய்ப்போச்சு. கையைத் தாருங்கோ (நீட்டுகிறார்) இது வல்லவோ கை? வள்ளல் கை. வாரி வழங்கும் கை சாஸ்திரம் சொல்வதாய் இருந்தால் இப்படியான கைகளுக்கெல்லோ சாஸ்திரம் சொல்ல வேண்டும்? இதை விட்டுச் சிவபட்டினிப் பட்டாளங்களும் கையை நீட்டுங்கள்.

அதெற்கெல்லாம் சாத்திரம் என்னத்தைச் சொல்லு கிறது. ஏதோ வேண்டுகிற காசுக்குப் பாதகமில்லா மல் நாலு வார்த்தை ஸ்சுவீப் விழும். வெளி நாடு போக காலம் இருக்கு. அந்நிய சொத்து வரும் என்று சொல்லி வைக்கிறதுதான்.

இ. மு: என்ன சாத்திரியார் அப்ப எனக்கும் அப்படித்தான் சொல்லப்போகிறீர்கள் போல் இருக்கு.

சாத்தி: சாச்சாய், உங்களுக்கு அப்படிச் சொல்லு வேணு ஏதோ கதைக்குச் சொன்னல் .........

இ. மு: சரி. சரி, பாரும் கையை.

சாத்தி: (கையை புரட்டிப் பார்த்துவிட்டு ஏதோ மனதுக் குள் எண்ணிச் சிரிக்கிறுர்.)

இ. மு: என்ன சாத்திரியார் சிரிக்கிறீர் ?

சாத்தி: அதாவது பாருங்கோ உங்களுக்கு இப்பொழுது அந் நிய சொத்து அனுபவிக்கவேண்டிய திசை வந்தி ருக்க வேண்டுமே. நான் சொல்லவில்லை, ரேகை சொல்லுது. இனிமேல்தான் உங்களுக்கு அதி சிறப் பான காலம். எதைத் தொட்டாலும் பொன்னுக விளையும் காலம். வெள்ளி தொடங்கிவிட்டார். ஒரே குதூகலந்தான்.

இ. மு: சரி சாத்திரியார். நான் இப்பொழுது ஒரு புது வியாபாரம் தொடங்க இருக்கிறேன். அதுதான் நல்லபடியாய் நடக்குமா நடக்காதா என்று அது பற்றிக் கொஞ்சம் சொல்லும்.

சாத்தி: என்ன முதலியார்வாழ். அதுதானே சொல்லிப்பிட் டேன். மண்ணைத் தொட்டாலும் பொன்னுகும் காலம். பயப்படாமல் எந்த யாபாரத்தையும் தொடங்குங்கோ. கறுப்பு யாபாரம் எதுகும் அதிக பலன் கொடுக்கும்.

இ. மு: அடே நான் நினைத்ததையே சொல்லிவிட்டியே. எப்படிச் சாத்திரியார் தெரியும்?

சாஸ்: அட சும்மாவா இந்தியாவிற்குப் போய் பிரம்மஸ்ரீ யிடம் சாத்திரம் படித்தனுன். அதோட பாருங்கோ; இந்த நாளையிலே யார் நேர்மையாய் யாபாராம் செய்து நல்லாய் வந்திருக்கிருன்? இப்படி Black கிலே தான் உழைக்க வேண்டும். அதற்குத் தானே இப்ப காலம்.

இ. மு: ஏதோ நானும் நினைத்தேன். கடவுள் மாதிரி நீரும் சொல்லிவிட்டீர். சந்தோஷம் (10ரூபா கொடுக்க சாஸ்திரியார் வேண்டிக் கொண்டு வெளியே போகின்ருர்)

(மணியடிக்கிறது. போஸ்ற்மன் கடிதம் கொண்டு வந்து கொடுக்கிருன். முதலியார் வேண்டிப் பார்த்து விட்டு Mrs இராமசாமிமுதலியாருக்கு வந்திருக் கிறது என்று மீனுட்சியைக் கூப்பிட்டு கொடுக்கிருர். அவள் உடைத்து வாசித்து விட்டு)

மீனு: என்னுங்கா, என்னுடைய தம்பி சிங்காரம் நாளைக் காலை பஸ்ஸில் வருகிருனும்.

இ. மு: வரட்டும், நல்லாய் வரட்டும். ஆள் ஒரு மாதிரி நல்லாய்க் கவனித்துக் கொள்.

மீனு: என்னுடைய தம்பியைக் கவனிப்பதற்கு நீங்கள் சொல்லியா கவனிக்க வேண்டும்?

திரை

# காட்சி II

இடம்: முதலியார் வீடு

பாத்திரங்கள்: மீனாட்சி
சிங்காரம்
இராமசாமி முதலியார்
பாலு
கணக்கப்பிள்ளை

(முதலியார் வெளியே போய்விட்டார் சிங்காரம் கதிரையில் இருந்து புத்தகம் படிக்கிறான். மீனாட்சி வீட்டினுள் இருந்து வரும் பொழுது கோப்பி கொண்டு வந்து வைத்து விட்டு)

மீனா: என்னடா தம்பி சிங்காரம், கதைப் புத்தகத் தோடை ஒன்றி விட்டாய் போல் இருக்கிறது. என்ன காதல் கதையோ?

சிங்கா: (புத்தகத்தை மூடிவிட்டு) இல்லையக்கா. இல்லை, எனக்கு என்ன காதல் வேண்டியிருக்கிறது. மூஞ்சூறு தான் போக வழியில்லாமல் விளக்கு மாற்றையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டதாம். இது தமிழ்வாணர் எழுதிய "வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி" என்ற புத்தகம்.

மீனு: அது சரி ஊரிலிருந்து வந்தியே ஊரில் எப்படி? எல்லோரும் சுகமாய் இருக்கிறார்களா? அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.

சிங்கா; ஊருக்கு என்ன கேடு எல்லோரும் சுகமாய்த் தான் இருக்கிறாங்க. எங்களைத் தான் வாழ வைக்க மனசு வரவில்லை.

மீனு: அதைப்பற்றி ஏனடா இப்போ கதைக்கிறாய்? நடந்தது நடந்து விட்டது.

சிங்கா: அது சரி, முக்கியமாக எதைக் கேட்கவேணு மென்று ஊரில் இருந்து பறந்து வந்தேனோ, அதைக் கேட்க மறந்து விட்டேன். எப்படி? புது இடம் பிடித்ததா?

மீனு: பிடிக்காமல் என்ன செய்யும் பிடிக்கத்தானே வேணும் நல்லாகத் தான் வைத்திருக்கிறார் விதம் விதமான சேலைகள், நகைகள், வயிறுபுடைக்கச் சாப்பாடு.

சிங்கா: சாப்பாட்டைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை உன்னைப் பார்த்தாலே தெரியுதே. முதலியார் வீட்டுச் சாப்பாடு எப்படி இருக்கும் என்று.

மீனு; உனக்குக் கேலி தான் (இருவரும் சிரித்தல்) சரி சரி காப்பி ஆறப்போசிறது. இதைக்குடி (சிங்காரம் குடித்துக் கொண்டு)

சிங்கா: சரி சரி அக்கா நாங்கள் எப்படியான வாழ்க்கை வாழ்ந்தோமென்று உனக்குத் தெரியுந்தானே. உம்......... சுகம் அனுபவிக்கவில்லை.

மீனு: அதற்கு இப்போ என்ன?

**சிங்கா:** இனிமேலாவது நாங்கள் சுகம் அனுபவிக்க வேண்டும். இதோ பாரக்கா. இந்த ஒரேயொரு சட்டை தான் உண்டு. மாறிப் போட ஒன்றும் இல்லை. நானுனது தம்பி தானே. எனக்கொரு 100 ரூபாய் தா அக்கா. (சிரித்து) நீ தான் இப்போ லச்சாதிபதியின் மனைவியாச்சே.

**மீனு:** அவர் கொழும்புக்குப் போய் விட்டார். வந்ததும் வேண்டித் தருகிறேன்.

**சிங்கா:** (வியப்போடு) என்னக்கா சொல்லுகிறாய்? இங்கு வந்து இவ்வளவு நாளச்சு? அப்படியிருந்தும் உன்னிடம் காசு இல்லை என்று சொல்லுகிறாய்.

**மீனு:** அதற்கு அவசியம் ஏற்படவில்லை. தேவையெல்லாம் பூர்த்தியாகுதே? பின்பு எனக்கேனடா பணம்?

**சிங்கா:** அது சரிதான். இப்போது பாரக்கா உனது அன்புத் தம்பி ஏதோ அவசரமாய்ப் பணம் கேட்கிறான். நீ கொடுக்க முடியவில்லையே.

**மீனு:** அதுவும் சரி தான் அதற்கு நான் என்னடா செய்வது?

**சிங்கா:** அப்படி வா வழிக்கு இரும்புப் பெட்டித் திறப்பு எங்கே? கொண்டு வா இப்படி.

**மீனு:** அவர் எங்கு போனாலும் தன்னுடன் தான் கொண்டு போவார்.

**சிங்கா:** ஓ! ஓ! அப்படியா சங்கதி, லொக்கா பெரிய ஆசாமி தான். நீ இந்த இடத்தில் தான் தப்புப் பண்ணிவிட்டாய், தப்புப் பண்ணிவிட்டாய்.

**மீனு:** எனக்கு விளங்கத்தான் சொல்லேனடா விளங்க.

**சிங்கா:** அக்கா வீட்டுப் பொறுப்பை ஏற்கத் தவறிவிட்டாய்.

மீனு: அவர் தந்தாத் தானே?

சிங்கா: பொறுப்பைத் தராவிட்டால் பெற்றுக் கொள்வது தானே? முதல் முதலாக நீ அழுதோ சிணுங்கியோ இரும்புப் பெட்டித் திறப்பை வேண்டி விடு. அது தான் ஆரம்பம். மனிதன் விட்டுக் கொடுக்க மாட்டான். கொஞ்சம் நடித்துவிட்டால் மனிதன் பம்பரமாகச் சுழரமாட்டாரா?

மீனு: சரி, வரட்டும் முயன்று பார்க்கிறேன்.

சிங்கா: என்ன பார்க்கிறது? வேண்டித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் பழையபடி ..........

மீனு: சரி வரட்டும்.

சிங்கா: அக்கா; முதல் தாரத்து மகன் ஒருவன் இருக்க வேண்டுமே? அவன் எங்கே?

மீனு: அதையேன் கேட்கிறாய்? அது ஒரு பெரிய கதை: நான் வந்த நாள் முதல் இங்கு வருவதில்லை. தேவைக் குத் தேவை பணம் வேண்டிக் கொண்டு போவான். அன்றைக்கொரு நாள் ஏதோ பயமுறுத்திப் பேசி விட்டுப் போனான்.

சிங்கா; அவன் இங்கு வராதது எங்களுக்குப் பெரும் வெற்றி தான்.

(கதவில் தட்டும் சத்தம்)

மீனு: யாரது?

இ: மூ: அது நான் தான்.

மீனு: ஒகோ கொழும்பாலே வந்து விட்டார் போல.

சிங்கா- அக்கா நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். (முதலியார் வருகிறார் கைத்தடியையும் சால்வை யையும் மீனாட்சி வேண்டிக் கொண்டு வைக்கிறாள் )

இ. மு: (சிங்காரத்தைப் பார்த்து) எப்படி சிங்காரம்? நல்ல சுகமா?

சிங்கா: உங்கள் தயவில் நல்ல சுகம்.

இ. மு: மீனாட்சி எனக்கு ஏதாவது குடிக்கக் கொண்டாம்மா அதோடு சிங்காரத்திற்கும் . . . . .

சிங்கா: அவசரமாக வெளியே போக வேணுமைக்கான். போட்டு வருகிறேன் அக்கா போட்டு வருகிறேன்.

இ. மு: சிங்காரம் சாப்பாட்டிற்கு இங்கே வந்துவிடு

சிங்கா: வேறு எங்கே போவது? (சிரித்துக் கொண்டு வெளி யேறல்)

மீனு: குடிப்பதற்கு எதில் கையிலே கொண்டு வந்து மேசைமேல் வைத்துவிட்டு கதிரையைத் துடைக்கிறாள்.

இ. மு: என்னப்பா வெய்யில்! என்னப்பா வெய்யில் ஒரே புழுக்கம் என்ன மீனாட்சி இங்கே கிட்டவாயேன். (முதலியார் கோப்பி என்று குடித்துவிட்டு, இதென் னகூப்பா?

மீனு: ஓம். கோழிச்சூப்பு உடம்புக்கு நல்லது அது தான்.

இ. மு: என்ன பாசம்? என்ன அன்பு? அது சரி. இன்றைக்குச் சாப்பாடு பிரமாதமாக இருக்குமோ?

மீனு: ஓம், கோழிக்கறி. கோழி ரோஸ் எல்லாம்கோழி உங்களுக்கு மட்டும் குரக்கன் ரொட்டி.

முதலி: என்ன செய்வது? இவ்வளவு வசதியிருந்தும் சோறு தின்னுமல் பண்ணிவிட்டார் கடவுள். மீனுட்சி இன்று மட்டும் கொஞ்சம் சோறு தாவன்.

மீனு: முடியாது, முடியாது, உங்களுடைய வருத்தத்திற்கு டயபிற்றீசிக்கு சோறு கண்ணிலும் காட்டக் கூடாது என்று அன்றைக்குத் தானே டாக்டர் சொன்னவர் அப்படிச் சாப்பிட்டு உங்களுக்கு எதாவது நடந்தால் என் கெதி என்னுவது?

முதலி: சீச்சீ பைத்தியக்காரி எனக் கொன்றும் நடவாது. இன்னும் இருபது வருடத்திற்கு இருப்பேனென்று சாத்திரி சொல்லியிருக்கிறுன்.

மீனு: நான் உங்களை ஒன்று கேட்கப்போகிறேன். தருவீர்கள் தானே.

முதலி: ஒன்றல்ல முப்பது தருவேன் கேள்.

மீனு: அதாவது......... அதாவது......... வந்து...... வந்து

முதலி: உம் சொல்லு சொல்லு வெட்கப்படாதே.

மீனு: என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்குது தானே

முதலி: இதென்ன பைத்தியக்காரக் கேள்வி உன்னைத்தானே நம்பி நானிருக்றேன்? நீ இப்படிக் கேட்கிறுய்.

மீனு: அப்படி யென்ருல் பணப்பெட்டிச் சாவியை நீங்கள் ஏன் என்னிடம் தரவில்லை.

முதலி: என்ன! என்ன!! (யோசித்து விட்டு) இவ்வளவு தானே? (சாவியைக் கொடுத்துக் கொண்டு) இனி மேல் நீ தான் எல்லாவற்றிக்கும் பொறுப்பு.

மீனு; என் மேல் கோபந்தானே.

முதலி: அடி பைத்தியக்காரி! உன்னேடு கோபித்துவிட்டு நான் இந்த வயதில் எங்கே போவது? (இருவரும் சிரிக்கிருர்கள். மீனுட்சி உள்ளே போகிருள்)

(கதவில் தட்டும் சத்தம்)

முதலி: யாரது?

கண: நான் தான் முதலியார் வாழ்.

முதலி: ஒகோ கணக்கப்பிள்ளையா வாப்பா வா.

கண: முதலியார் வாழ் கொழும்பு போயிருந்தீங்களே எப்போது வந்ததோ......

முதலி: இன்று தான் வந்தோம் ..... என்னையா உம்முடைய இழுப்பு... ...

கண: இன்றைய தினகரன் பார்த்ததோ...... அதிலென்ன போட்டிருக்காங்க தெரியுமோ ... ......

முதலி: எனக் கெப்படித் தெரியும்? நீர் தானே வாசித்தது.

கண: அதாவது முதலியார் வாழ் கறுப்புப்பண வேட்டையைப் பற்றிய விபரம்.

முதலி: என்னையா ...... என்னையா ...... கறுப்புப் பணத்தைப் பற்றியா வாசியப்பா வாசி கேட்போம்.

கண: (வாசிக்கிறார்) வருமான வரி இலாகா பறந்து பிடிக்கும் உத்தியோகத்தர்கள் மேல் வீட்டுப் படிக்குக் கீழ் புதைக்கப் பட்டிருந்த இரண்டு லட்சம் ரூபாவைக் கைப்பற்றினார்கள்.

முதலி: (திடுக்கிட்டு எழுந்து) எந்த ஊர்லே... — —

கண: கொழும்பிலே தானுங்க.

முதலி: அப்பமயா ...... கொழும்பிலே தானே, இங்கே அதுவும் மாத்தளைக்கு வரபோறாங்களா?

கண: அப்படியில்லை முதலியார் வாழ் இப்பொழுது கண்டியிலே ஒரு ஆபிஸ் திறந்திருந்தாங்கள். 15 மைல் தானே மாத்தளைக்கு.

முதலி: (கோபத்தோடு) என்னையா பேய்க்கதை கதைக்கிறீர் நான் ஏதோ கறுப்புப்பணம் புதைத்து வைத்திருக்கிற மாதிரி.

கண: அப்படிச் சொல் வேணு.

முதலி: பின்னை உம்முடைய கதையென்ன?

கண: சும்மா Information னுக்காக சொல்லி வைத்தேன்.

முதலி: சரி சரி கதைத்தது போதும் உம்முடைய வேலையைப் பாரும்.

கண: (இருக்கப் போனவர் திரும்பி வந்து) இன்னுமொரு விஷயம் தெரியுமோ? எங்கட தம்பி இருக்கல்லோ அது தானுங்கோ உங்க மவன் பாலு.

முதலி: என்னய்யா சொல்? ஒரே ஒரு பிள்ளை: என்ன மாதிரி வளர்த்தேன்; செலவழித்து யாழ்ப்பாணத்திலே விட்டு படிப்பித்தேன் அதற்கு கொடுத்து வைக்க வேணுமய்யா கொடுத்து வைக்க வேணும் அது இப்போ ...

கணா: அப்படி இல்லீங்க முதலியார் வாழ் அன்றைக்கு மாத்தளை ஒட்டலுக்கு தேகம் அலுப்பாயிருக்கே யென்று ஒரு கிளும் அடிக்கப் போனேனுங்க...

முதலி: (இடை மறித்து) என்ன நடந்தது.... என்ன நடந்தது.

கணா: அதை எப்படி இந்த வாயலே சொல்வேன்?

முதலி: அப்ப மூக்காலே சொல்லுமய்யா சொல்லும்.

கணா: அதாவது முதலியார் வாழ்... அங்கே இன்னுமொரு நாலைந்து காலிப் பயல்களோடு பீர் குடித்து அது தானுங்க பீர் குடித்துக் கொண்டு இருந்துதுங்க பசங்கள் மட்டுமல்ல; இரண்டு குட்டியும் குதிரைவாலொடு இருந்ததுங்க.

முதலி: அப்படியா சங்கதி? முருகா! நான் பெற்ற பிள்ளை இப்படியா போக வேணும்.

கணா: அதோடு பாருங்க முதலியார் வாழ்; ஏதோ சினிமாப் படம் எடுக்கப் போறுங்களாம். உருப்பட்டால் போலத்தான். சிறிசு பாருங்கோ சிறிசு, கொஞ்சம் கட்டுப்படுத்தி வையுங்கள்.

முதலி: எப்படி யய்யா கட்டுப்படுத்த ஏலும்? அவன் தானே மீளுட்சி வந்ததிற்கு பின் இந்த வீட்டுப் பக்கமே வருவதில்லை. தேவை யென்ருல் பணத்துக்கு மட்டும் வருவான்.

கணை: அது சரி தானே.

முதலி: எதய்யா சரி?

கணை. அப்படியா விஷயம் என்று போட்டேன்

முதலி: சரி சரி போய் கணக்கை எழுதும்.

கணை: பெரிய இடத்து விவகாரம்... நமக்கேன் இந்த வம்பு (என்று சொல்லிக்கொண்டு கணக்கில் ஈடுபடுகிறார்) (பாலு உள்ளே வருகிறான்)

முதலி: யாரது தம்பி பாலுவா? வாடப்பா வா. பெற்றவனுக்கென்று மனம் உண்டு என்று உனக்கு எங்கே தெரியப்போகிறது. அது உனக்கு தெரியாது. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று தெரியாமலா சொல்லி வைத்தார்கள்.

பாலு: அதைப் பற்றி நான் பேசவரவில்லை. அப்பா இனிமேல் கதைத்து பிரயோசனமில்லை. நான் ஒரு முக்கிய விஷயமாய் வந்திருக்கிறேன்.

முதலி: நீ விஷயமில்லாமல் வரமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். பாலு நான் சொல்வதை சற்று பொறுமையாக கேளடா. எனக்குப்பின் இந்தச் சொத்தெல்லாம் யாருக்கடா. உனக்குத் தானே. நீ ஏனடா இந்த வீட்டுப் பக்கமே வருவதில்லை.

பாலு: அப்பா! நீங்கள் எப்போ இரண்டாம் தாரம் கட்டிக் கொண்டீர்களோ அன்றே எனக்கு வெறுப்பேற்பட்டு விட்டது. அப்பா மகன் என்ற பாசமே இல்லாமல் போய் விட்டது.

முதலி: என்னடா தப்புச் செய்தேன்?

பாலு: செய்யுறதையும் செய்து போட்டு இப்போ என்னய் யா கேட்கிறீர்கள்.

முதலி: இரண்டாம் தாரம் கட்டினது தானே தப்பு.

பாலு: ஊரே சிரிக்கிறது...... அப்பா ஊ ரே சிரிக்கிறது வயதோ 65. வயது வந்த மகனொருவனிருக்க இரண் டாம் தாரம் கட்டிக் கொண்டீர்களே. நான் சொல்லவில்லை. போய் ஊரிலே கேட்டுப்பாருங்கள்.

முதலி: பாலு ஊர் பலதைச் சொல்லும். அதற்கு நாங்கள் கவலைப்படலாமா? சரி நான் தான் ஒரு தப்பு பண்ணி விட்டேன். என்று வைத்துக்கொள். இனி என்னடா செய்யமுடியும். நடந்தது நடந்து விட் டது. இதற்காக நீ வீட்டுக்கு வராமல் போவதா. நீ வராததிலிருந்து நான் படும் துன்பம் கொஞ் சமா? என்னடா செய்யச் சொல்கிறாய்?

பாலு: அவளைத் துரத்தி விடுவது தானே. என்று இந்த வீட்டை விட்டு துரத்துகிறீர்களோ, அன்று தான் இந்த வீட்டுக்கு வருவேன்.

முதலி: பாலு அதெப்படியடா முடியும்? எப்படியடா முடி யும். நாலு பேரறிய வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து விட்டு துரத்த முடியுமா? நீயே சொல்; என் னுடைய அந்தஸ்து, கௌரவம் என்ன ஆகும்?

பாலு: ஏன் முடியாது? என்ன பதிவுத் திருமணமா செய்து கொண்டீர்கள். என்னிலும் பார்க்க உங்களுக்கு அவள் பெரிது. வைத்துக் கொள்ளுங்கள்.

முதலி: (மௌனம்;) அது போவட்டும். பாலு உன்னைப்பற்றி பலபேர் பலவிதமாக சொல்லக் கேள்விப்பட்டேன். எல்லாம் உண்மையாடா?

பாலு: (ஏளனச் சிரிப்போடு) ஊர் பலதைச் சொல்லும். அதற்கு நாங்கள் கவலைப்படலாமா?

முதலி: நான் சொன்னதையே எனக்குச் சொல்லிக் காட்டுகிறாயே. ஏதோ சினிமாப் படம் பிடிக்கப் போகிறாயாம். எங்களுடைய பரம்பரையிலேயே இப்படியொருவன் நடந்து கொள்ளவில்லையே,

பாலு: (உரத்து ஏளனச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு) பெரிய பரம்பரையாம் பரம்பரை. நீங்கள் நடந்து கொண்டது போல யாரவது நடந்து கொண்டிருக்கிறார்களா? சொல்லப்பா சொல்லு.

முதலி: (மிகவும் துக்கத்துடன்) அடே பாலு! திரும்பத் திரும்ப அதையே சொல்லி என்னை ஏனடா உயிரோடு வதைக்கிறாய். அடே பாலு நான் உன் தகப்பன் தானே? நீ என் மகன் தானே? தந்தை ஒரு தவறைச் செய்து விட்டால் அதை மகன் மன்னித்துக் கொண்டால் என்னடா குடியா முழுகிப் போகும்.

பாலு: (வெறுப்போடு) இந்த நிலைக்கு உள்ளாக்கியது நீங்கள் தானே. சரி சரி நேரம் போகிறது; நான் போக வேண்டும். அவசரமான அலுவல் இருக்கு. ரூபாய் ஆயிரம் வேண்டும்.

முதலி: நீ வந்து இருக்கவு மில்லை ஒரு காப்பியாவது குடித்து விட்டுப் போ.
(மீனாட்சி மீனாட்சி ஒரு காப்பி கொண்டு வா)

கண: ஓம் தம்பி; அப்பா சொல்லும் பொழுது குடித்து விட்டுத்தான் போங்களேன்.
(மீனாட்சி கோப்பியுடன் வருகிறாள் பாலு கோபத்துடன் மறுபக்கம் திரும்பிக் கொள்கிறான்)

முதலி: தம்பி பாலு வேண்டிக் குடிடா மீனுட்சி கொடு. (மீனுட்சி நீட்டுகிருள்)

பாலு: (கோபத்தோடு) வேண்டிக் குடிக்கவா அதுவும் இவளின் கையாலா.
(கோப்பையை தட்டி விடுகிருன் கீழே விழுந்து உடைகிறது)

முதலி: (கோபத்தோடு) அடே பாலு என்ன காரியம் செய் தாய் (என்று சொல்லிக் கொண்டு எழுந்து அடிக் கக் கை ஓங்கிஞர். ஓங்கியவர் அடியாமல் திரும்பி வந்து கதிரையில் இருந்து விட்டார்)

கண: (சிவ சிவ என்று சொல்லிக் கொண்டு உடைந்த துண்டுகளை பொறுக்கிஞர்)

மீனு: (முதலியாரைப் பார்த்து) என்னை இப்படி அவமா னப் படுத்த வேண்டுமென்று எத்தனை நாட்களாக திட்டமிட்டு வேலை செய்தீர்கள்.
(ஓ வென்று அழுகிருள்) (முதலியார் மௌனமாக தலையில் கைவைத்த படி இருக்கிருர்)

பாலு: அப்பா நான் போக வேணும் நேரமாச்சு.

முதலி: பொய்யாமொழி கணக்கப்பிள்ளை கேட்கிறதை கொடுத்து விடப்பா.

கண: (பணமெடுக்கிருர்)

சிங்கா: (சத்தத்தைக் கேட்டு உள்ளிருந்து வருகிருன்) என் னத்தான் ஒரு மாதிரி இருக்கிறீர்கள். இது யார் புது விருந்தாளியோ?

மீனு: இது ஒரு புதுத் தொரை. பணம் வேண்ட வந்தி ருக்கிருர். இஞ்கே என்ன புதையலா இருக்கு,

சிங்கா: அது தானே கேட்டேன்.

பாலு: இவ்வளவுக்கு வந்தாச்சா; ஊர் பேர் தெரியாதது களுக்கெல்லாம் மவுசு வந்தால் இப்படித்தான் வரும் சீச்சி வெட்கம் கெட்டவளே. வைப்பாடிச்சியாய் வந்தது மல்லாமல் அதிகாரம் வேறு பண்ணப் பார்க்கிறாயா?

மீனு: அய்யோ! இப்படியெல்லாம் பேசக் கேட்டுக் கொண்டு தானே கல்லுப் பிள்ளையாராக இருக்கி றீர்கள். (அழுகிறாள்.)

சிங்கா: (பாய்ந்து வந்து) அடே பணத்துக்கு வந்த தொகரை என்னுடைய அக்காளைப் பார்த்து என்னடா சொன்ன (என்று சொல்லிக் கொண்டு வர ஓத் தும் வர அடித்து விடுகிறான் கன்னத்தில்) உடனே சிங்காரம் அய்யோ அக்கா என்று கத்திக் கொண்டு விழ கணக்கப்பிள்ளை பாலுவிடம் பணத்தை கொடுத்து அனுப்பி வைக்கிறார்)

முதலி: அய்யோ! அய்யோ!! எனக்கு ஒரு வழியாலும் நிம் மதி கிடையாதா? முருகா! முருகா இதுவும் வேண் டும் எனக்கு இன்னமும் வேண்டும்.

திரை

# காட்சி III

இடம்: முதலியார் வீடு

பாத்திரங்கள்: இராமசாமி முதலியார்
கணக்கப்பிள்ளை
சிங்காரம்
மீனாட்சி

(முதலியார் வெளியில் போய் விட்டார். சிங்காரமும் மீனாட்சியும் பேசி கொண்டு இருக்கிறார்கள். சிங்காரம் வாயில் பிளாஸ்டர் போட்டிருக்கிறான்)

மீனா: சிங்காரம் இங்கே வாடா (காயத்தை பார்த்து) படுபாவி; இப்படி அடித்தானே.

சிங்கா: இது Simple அக்கா Simple அவன் அடித்தது நன்மைக்கு தான். இனிமேல் தான் எங்களுக்கு விடிவு காலம்.

மீனா: (சிரித்துக் கொண்டு) என்னடா அடியை வேண்டிக் கொண்டு நன்மை என்று சொல்கிறியே.

சிங்கா: இனிமேல் தானக்கா என் திட்டம் வேலை செய்யப் போகிறது.

மீனா: என்னடா விளங்கத்தான் சொல்லேன்.

சிங்கா: முதலியாருக்கு முன்னால் உன்னை அநாதை

வைப்பாடிச்கி என்று பாலு பேசினன். என்னை அடித் தான். அதை வைத்துக் கொண்டு ஒரு திட்டம் வகுத்திருக்கிறேன்; அது ஒரு சாணக்யத் திட்டம்: அது வெற்றி பெற்றால் எங்கபாடு ஒரே குஷிதான் ஒரே குஷிதான்:

மீன: அது என்னடா திட்டம்.

சிங்கா: இங்கே கிட்டவாயேன் இரகசியமாக சொல்லு கிறேன். (காதுக்குள் சொல்லுகிறான்)

மீன: மனிதன் கிட்டே உது நடக்காது. மகன் மேல் எங்களுக்கு காட்டா விட்டாலும் அபார அன்பு அன்று தான் பார்த்தியே, உன்னை அடித்தபோது ஏதாவது கதைத்திதா மனிதன். கல்லுப்பிள்ளை யார் மாதிரி உற்காந்து கிட்டு இருந்திதே:

சிங்கா: சரி; இதோ ஒரு புதிய திட்டம். இதை நீ சரிவர நடித்தாயோ அக்கா, பின்பு எங்கள் பாடு நிம்மதி தான்.

மீன: சரி சொல்லு

சிங்கா: (காதுக்குள் ரகசியமாக சொல்லுகிறான்)

மீன: சரி, அவர் இடம் கொடுக்கா விட்டால் நாங்கள் எங்கேயடா போவது.

சிங்கா: நல்லாய்ப் போச்சு. போகிறதாவது, போகிறது நடிப்புத்தானே. அக்கா மனிதனிருக்கிறானே மனி தன், மரியாதைக்குப் பயந்தவன், அப்படியொரு வெருட்டு போட்டவுடன் பம்பரமாக சுழல்வார் அக்கா சுழல்வார்
எங்கை அக்கா போனவர்.

மீனு: எனக்கென்ன தெரியும்? ஏதோ கராம்பாம் கள்ளக்கடத்தலாம் என்று காதில் விழுந்தது

சிங்கா: (வியப்போடு) என்னக்கா? இந்தியாவுக்கு கராம்பு மூட்டை கள்ளக் கடத்தலில் இவரும் ஈடுபட்டிருக்கிறாரா? பெரிய பயங்கரமான வியாபார மாச்சே அம்புட்டால் அதோ கதிதான்.

(கணக்கப்பிள்ளை உள்ளே வருகிறார்)

கணை: (சிங்காரத்தைப் பார்த்து) சிங்கார அய்யாவுக்கு பலத்த காயமோ. எல்லோருக்கும் கழுத்திலே குருசு இருக்கும். அய்யாவுக்கு சொக்கிலே இருக்கும்.

சிங்கா: நீ யாரய்யா? கேட்க வந்துட்டாய், கேட்க:

கணை: (வாயிலடித்துக் கொண்டு) அது தப்புத்தானுங்க தப்பு.

சிங்கா: முதலியார் எங்கேயோ போய்விட்டார், வந்ததும் வாய்யா.

கணை: முதலியார் வாள் தான் என்னை இந்த நாள் இந்த நேரம் வரச் சொன்ன வராச்சே.

சிங்கா: (கோபத்தோடு) அவர் தானே இல்லே போட்டு வா.

கணை: சரி நான் போட்டு வருகிறேன். முதலியார் வந்தால் வந்ததாக சொல்லுங்கள். புதுநிர்வாகம் போலிருக்கு:

(வெளியே போக முதலியாரும் உள்ளே வருகிறார் இருவரும் சந்திக்கிறார்கள். சிங்காரமும் மீனாட்சியும் உள்ளே போகிறார்கள்)

முதலி: என்ன கணக்கப்பிள்ளை வெளியே போக ஆயத்தம் போலிருக்கு.

கண: நீங்கள் இல்லை அது தான்.
(இருவரும் உள்ளே வருகிறார்கள்)

கண: கற்பிட்டிக்கு போயிருந்தீர்களே; எப்படி விஷயம்?

முதலி; (அக்கம் பக்கம் பார்த்து விட்டு) முருகன் செயலால் எல்லாக் காரம்பு மூட்டைகளும் பாக்கு மூட்டைகளும் தோணியில் ஏற்றிவிட்டாச்சு. இம்மட்டுக்கும் நடுக்கடலிலே இந்தியாவை நோக்கி போய்க் கொண்டிருக்கும். போய் சேர்ந்ததும் தந்தி அனுப்புவார்கள். கதிர்காமத்தானே, இந்நாள் வரை புடிபடவில்லை இம்முறையும் காப்பாற்றிவிடு. உனது சந்நிதியிலே பத்து மூட்டை அரிசி அவிச்சுப் போடுகிறேன்;

கண: முருகன் உங்களை கைவிடமாட்டான்; நீங்கள் முருக பக்தனாச்சே.

முதலி; (மேசையிலிருந்து கொண்டு) மீனாட்சி! மீனாட்சி! (என்று கூப்பிட்டு விட்டு) கணக்கப்பிள்ளை, வீட்டில் ஒருவரும் இல்லையோ?

கண: (உள்ளே கையைக் காட்டி மெதுவாக) உள்ளே தான் முதலியார்வாள்.

மீனா: (பொய்யழுகை அழுது கொண்டு) (உள்ளிருந்து வெளியில் வந்து கோபமாக உரத்து) என்னை ஏன் கூப்பிட வேண்டும். நான் தான் அநாதை; வைப்பாடிச்சியாச்சே எங்களுடைய வீடா? வாசலா வந்தான் வரத்தார்கள் தானே நாங்கள்.

முதலி: என்ன மீனுட்சி சொல்லுகிருய்?

மீஞ: உங்களுக் கெங்கே விளங்கப் போகிறது. அன்று உங்கள் அன்பு மகன் உங்கள் முன்னிலேயிலே பேசினன், என் தம்பியை அடித்தான்; நீங்கள் என்ன செய்தீர்கள், (அழுது கொண்டு) நாளைக்கு என்னை சுட்டுக் கொன்ருலும் பேசாமல் தானே இருப்பீர்கள்.

கண: சாச், சா; தம்பி அப்படிச் செய்யுமா?

மீஞ: ஒய் கணக்கப்பிள்ளை; நீ உம்முடைய வேலையைப் பாரும்.

சிங்கா: நாளைக்கு உங்களுக்குதான் ஏதாவது நடந்து விட்டால் பின்பு அக்கா எங்கே போவது. ஒரு வீடாவது உண்டா, தம்முடையது என்று சொல்லிக் கொள்ள.

கண: அப்படிச் சொல்லக் கூடாது. முதலியார் வாள் இன்னும் இருபது வருடத்துக்கு இருப்பார்.

மீஞ: தம்பி சொல்லுகிறதை கேளுங்க.

சிங்கா: நாங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். நீ தானக்கா சொல்லு.

மீஞ: நாங்கள் வீட்டையே விட்டுப் போகப்போகிருேம்.

முதலி: என்ன! என்ன! வீட்டை விட்டா, அப்படிப் போனல் என்னுடைய அந்தஸ்து கௌரவம் என்ன ஆவது. நாலுபேர் சிரிக்க மாட்டார்களா?

சிங்கா: சிரிக்கட்டும் நன்ருகச் சிரிக்கட்டும், சிரியாமல் பண்ணுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. நீங்களும் கௌரவமாக வாழலாம்; நாங்களும் சுயமரியாதையோடு வாழலாம்.

முதலி; என்னப்பா வழி? சொல்லித் தொலையேன்.

மீனு: நான் உங்களோடு மானத்தோடு வாழ வேண்டுமானுல் உங்களுக்கு தொடர்ந்து நான் மனைவியாக இருக்க வேண்டுமானுல் இந்த வீட்டை என் பேரில் எழுதிவிடுங்கள்.

முதலி: என்ன வீட்டையா? என் உயிர் போனுலும் தர மாடடேன், எனக்கிருப்பது ஒரே ஒரு மகன். அவனுக்குத் தான் வீடு.

சிங்கா: அக்கா, அவருக்கு மகன் பெரிது; புறப்படு போவோம்.

(மீனுட்சி உள்ளே போகிருள்) என்ன பிள்ளையா குட்டியா என்ன வயசு போய் விட்டதா? நாளைக்கு நல்லவனு பார்த்து கையில் கொடுத்து விடமாட்டேனு. (உள்ளே போகிருன்)

முதலி: (தலையில் அடித்துக் கொண்டு) என்னை உயிரோடு வதைக்கிருர்களே. (கோபத்தோடு) வெளிக்கிட்டு இன்றே போங்கள்; இங்கே இருவரும் இருக்க வேண்டாம்.

கணே: (எழுந்து வந்து) முதலியார் வாள் சிங்கார அய்யா இருக்கிருரே சிங்கார அய்யா சொன்னமாறி யாருக்காவது கட்டிக் கொடுத்து விட்டால் என்ன ஆவது அது ஒரு தருதலையாச்சே.

முதலி: என்னய்யா செய்யச் சொல்லுகிருய், வீட்டை எழுதிக் கொடுக்கவா? உயிரிருக்கும் வரை கொடுக்க மாட்டேன். (அங்குமிங்கும் நடக்கிருர்)

(சிங்காரம் தூக்க முடியால் கையில் பெட்டியுடன் முன்வர மீனுட்சி பின் வருகிருள்) வெளியே போக முதலியார் மீனுட்சியின் கையைப் பிடித்துக் கொண்டு)

மீனாட்சி மீனாட்சி போகாதேயம்மா அவன் போகட்டும், உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்.

மீனா: (கையை உதறிக் கொண்டு) சீ விடு கையை உன்னோடு வாழ்ந்தது போதும். உன்னோடு வாழ்ந்து நான் கண்ட சுகம் என்ன? இரண்டு நாளாவது சினிமாவிற்கு கூட்டிக் கொண்டு போனியா?. அல்லது பீச்சுக்காவது கூட்டிக் கொண்டு போனியா? சாப்பாடு மட்டும் போட்டாய். அது எங்கள் வீட்டு நாயும் தான் சாப்பிடுகிறது. விடு கையை நான் போவதற்கு.

முதலி: அய்யோ மீனாட்சி; நீயா இப்படிப் பேசுகிறாய். நான் உன்னை இரண்டாம் தாரம் கட்டி என்ன சுகத்தை அனுபவித்தேன். டேய் சிங்காரம் என்னை ஏனடா உயிரோடு கொள்ளுகிறீர்கள். 65 வயதில் இரண்டாம்தாரம் கட்டிக் கொண்டேன் பார்; அதற்கு இதுவும்வேணும் இன்னமும் வேணும். கொண்டு வாடா பத்திரத்தை.

(சிங்காரம் கொண்டு வந்து கொடுத்து பேனையும் கொடுக்கிறான். கையெழுத்து வைக்கும் பொழுது கணக்கப்பிள்ளை தும்முகிறார். முதலியார் யோசித்து விட்டு கையெழுத்து வைக்கிறார், முருகன் படம் தானாக விழுந்து உடைகிறது. அப்படியே முருகா என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்).

திரை

# காட்சி IV

இடம்: **முதலியார் வீடு**

பாத்திரங்கள்: **இராமசாமி முதலியார்**
**கணக்கப்பிள்ளை**
**சிங்காரம்**
**மீனாட்சி**
**முனியன்**
**மரைக்கார்**

(முதலியார் வீடு. வெளியே போய்விட்டார். சிங்காரம் கதிரையில் இருந்து கொண்டு பேசன்ட் விளையாடிக் கொண்டிருக்கிறான். மீனாட்சி உள்ளிருந்து கொண்டு முறுக்குத் தட்டுடன் வருகிறாள்,

மீனா: சிங்காரம் இந்தா, நான் சுட்டது சாப்பிடடா.

சிங்கா: என்ன Celebration ஞ? எப்படி யக்கா என்னு டைய Plan. மனிதன் மசிஞ்சு போனாரே மசிஞ்சு.

மீனா: நான் நேற்று பயந்தே போனேன், நாங்கள் வீட் டைவிட்டு வெளிக்கிடும் போது மனிதன் தானே பேசாமல் தானே இருந்தார்.

சிங்கா: நானும் தான், சரி சரி வாக்கா ஒரு றவுன் பே சன்ட் விளையாடுவோம். (இருவரும் விளையாடுகி றார்கள்) அக்கா நல்ல படம் நவராத்திரி சென்றல் தியட்டரிலே ஓடுகிறது, இன்றைக்கு போவோமா.

மீனா: அதற்கென்ன பார்த்தால் போகுது.

சிங்கா: அந்த லொக்கானவை மட்டும் கூட்டிக் கொண்டு வந்து விடாதே. (இருவரும் சிரிக்கிறார்கள்)

(முதலியார் வருகிறார். இருவரும் எழுந்து உள்ளே போகிறார்கள்) முதலியார் மேசையிலிருந்து சுருட்டு பத்திக் கொண்டு ஏதோ யோசிக்கிறார். கணக்கப்பிள்ளை வந்து முதலியாரை ஒரு மாதிரி பார்த்துவிட்டு தனது இடத்திலிருந்து கணக்கெழுதுகிறார். சிங்காரமும் மீனாட்சியும் படம் பார்க்க போகிறார்கள்.

முதலி: (பார்த்து விட்டு) எங்கேயோ போக ஆயத்தம் போலிருக்கு.

மீனு: நல்ல படமாம்' அது தான் நானும் தம்பியும் போகிறோம்.

சிங்கா: (ஏளனமாக) நவராத்திரி; வருவதாயிருந்தால் வரலாம்.

முதலி: எனக்குத்தானே எந்த நாளும் சிவராத்திரியாச்சே என்ன நவராத்திரி வேண்டியிருக்கு. (இருவரும் போகிறார்கள்)

கண; வர வர மோசம். என்று இந்த சிங்கார அய்யா இந்த வீட்டுக்கு வந்தாரோ அன்று பிடித்தது சின்னம்மாவுக்கு.

முதலி: (கோபமாக) உரத்து நீர் தானே அய்யா இதுகளை சேர்த்து விட்டீர்.

கண: அப்ப நல்லாத் தானே இருந்தான்.

முதலி: இதுவு வேணுமய்யா எனக்கு இன்னமும் வேணும் என்ன இருந்தாலும் வாழ்க்கையில் நிம்மதி வேணுமய்யா நிம்மதி வேணும்; முருகா, ஏன் இப்படி என்னை கஷ்டப்படுத்துகிறாய்? நான் யாருக்கொரு தீங்கு செய்தேன்.

கண: அப்படி நீங்கள் சொல்லக் கூடாது. நீங்கள் தான் நேர்மைக்கு லோக்கல் காந்தியாச்சே.

(முனியன் வருகிறான்)

முனி: முதலாளி கணக்கப்பிள்ளையய்யா வணக்கமுங்க.

கண: எப்படி முனியா, இந்தப் பக்கம்.

முனி: அது தானுங்க என்னுடைய ஈடுவைத்த சங்கிலியை எடுக்க வந்தனான்.

கண: நீ கெட்டிக்காரன் தான். எந்த மாதம் ஈடு வைத்தது முதல் வட்டி யெல்லாம் கொண்டு வந்தியோ?

முனி: அதாவது வந்து பாருங்கோ, எனது கடைசிக் குழந்தை சடையன் பிறப்பதற்கு கடைசி நாள் முந்திங்கோ.

கண: என்னப்பா இழவு, உன்னுடைய கடைசிக் குழந்தை பிறந்த மாதம் எனக்கு எப்படி தெரியும்? எந்த மாதம், எந்த நாள், என்ன திகதி என்று சொல்.

முனி: அது தானுங்க என்னுடைய பெரிய ஆத்தாள் என்ற வீட்டுக்கு வந்த நாள். அதான் உங்க வீட்டுக்கு வந்து விறகு பிளந்தேனே.

கண: இதுகளை யாருக்கப்பா தெரியும்? எந்தநாள், எந்த மாதம் எந்த ஆண்டென்று சொல்லு.

முனி: நான் படிக்காதவனுங்க. ஞாபகமில்லை. உங்கள் கொப்பியிலே பாருங்க தெரியும்.

கண: எங்கே ஈடுவைத்த துண்டைக் கொண்டு வா பாப்போம்.

முனி: துண்டுதானே? தரவில்லையே?

கண: அப்படியா சங்கதி? நீ எதற்கும் முதலாளியைப் போய் கேள்.

முனி: முதலாளி கும்பிடுகிறேனுங்க.

முதலி: இது பெரிய தொல்லையாய் போச்சு. என்னையேன் கும்பிடுகிறாய். நான் என்ன கடவுளா? என்ன விஷயமென்றுச் சொல்.

முனி; நான் ஈடுவைத்த நகையை எடுக்கப் போறேனுங்க.

முதலி: (யோசித்து விட்டு) நகையா? அந்தக் கணக்கு எப்பவோ முடிந்தாச்சு.

முனி; என்னங்க? அன்றைக்கு வந்ததிக்கு இன்றைக்குத் தானே வருகிறேன்?

முதலி: அதாவது வந்து குறிப்பிட்ட காலத்துக்குள் நீ எடுக்கவில்லை, ஏலம் போட்டாச்சு. இனியென்ன செய்வது? அவ்வளவு தான் நீ கொடுத்து வைத்தது.

முனி: (அழுது கொண்டு) என்ன முதலாளி இப்படிச் சொல்லுறீங்க? இது உங்களுக்கு நல்லதா?

முதலி: என்ன செய்வது? காசு ரோலாக வேண்டும் இப்படி ஒவ்வொரு பரதேசிப்பயலும் வைத்துவிட்டு எடுக்காமல் விட்டால் நான் பிசுனசு செய்வ தில்லையா. இனியென்ன செய்வது? நடந்தது நடந்து விட்டது.

முனி: (அழுது கொண்டு) அய்யோ! முதலாளி அப்படிச் சொல்லாதையுங்க; இருபது வருஷமாகப் பனிவெயில் பாராது மாடாய் கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து மிச்சம் பிடித்து வேண்டிய ஒரே ஒரு சங்கிலி, எனக்கிருக்கும் ஒரே ஒரு சொத்து, என்னுடைய சம்சாரம் வேண்டியதற்கு இரண்டே இரண்டு நாள் தான் போட்டிருக்கிறாள். அவள் ஆசை தீர போடவுமில்லை; முதலாளி கும்பிடுறேனுங்க, உங்கட பெட்டியிலே பாருங்க. இருக்கும்.

முதலி: எதைப் பார்க்கிறது. அதானே விதத்தாச்சு; இங்கே நின்று கத்தாதே போ.

முனி: அய்யோ! கணக்கப்பிள்ளையய்யா ஒருக்கா சொல்லி விடுங்கோ.

கண: முதலாளியின் வாயில் பொய்யே வராது, அவர் நேர்மையானவர். லோக்கல் காந்தி. அடுத்த மாதம் J. P. பட்டம் கொடுக்கப்போருங்க. இந்த வட்டிக் கடையில் அவருடைய சொல்லுக்கு மேல் அப்பீல் கிடையாது.

முனி: அய்யோ! நீங்களுமோ இப்படிச் சொல்லுகிறீர்கள்? அய்யோ! மாரியாத்தாள், படியாத எங்களை அப்பாவிகளை ஏமாற்றுகிருர்கள். மாரியாத்தாள் உங்களை சும்மா விடமாட்டாள்.

முதலி: இதிலே நின்று ஒப்பாரி வையாதை, போ வெளியே.

முனி: (அழுது கொண்டு) நான் போகிறேன்; வாயில்லாப் பூச்சிகள் தானே நாங்கள்? முத்துமாரி யாத்தா அடுத்த தேர்த்திருவிழாவிற்கு முன் ஏதாவது இவனுக்குக் காட்டிவிடு. சத்தியமாகச் சொல்லுகிறேன். அடுத்த தேர்த்திருவிழா ராமசாமி நீ பார்க்க மாட்டாய்; அவள் விடமாட்டாள். உன் கண்கெட்டுத்தான் போகும். (குனிந்து மண் அள்ளிப் போட்டு திட்டி விட்டு வெளியே போகிருன்)

முதலி: (சிரித்துக் கொண்டு) பெரிய வசிட்ட முனிவர். பார் வசிட்டமுனிவர். சாபம் கொடுக்கிருர்.

கண: (மன வருத்தத்தோடு) அப்பாவி வேறு எதைச் செய்வான்? அது தானே அவனது ஆயுதம்.

முதலி: ஓய் கணக்கப்பிள்ளை, நீரும் வர வர மாறிக் கொண்டே போகிறீர்; உமக்கும் சீட்டுக் கிழிக்கத் தான் வேண்டும்.

மணி: அவன் வர்க்கம் தானுங்க, நானுங்க, மாடு போல உழைக்கிறவன்.

(மரைக்கார் உள்ளே வருகிறார்)

முதலி: யாரது? காக்கா வா? வாங்க வாங்க.

மரைக்: (கோபத்தோடு) என்னே இவ்வளவு நாளும் ஏமாத்தினது போதும். என்னுடைய கணக்கைப் பார்த்து முடித்து விடும்.

முதலி: ஏன் அவசரப்படுகிறீர்? கணக்குத் தானே புத்தகத்திலே இருக்கு.

மரைக்: அதைத் தான் கேட்கிறேன்.

முதலி: ஒரு புது வியாபரத்தில் உமது பங்கையும் போட்டிருக்கு அது வெற்றி பெற்றால்............

மரைக்: அதென்னய்யா புதுவியாபாரம்? நான் சொன்னேனா? என்னைக் கேட்டியா?

முதலி: இரண்டு நாள் பொறுத்துக் கொள்ளும். பின்பு உமது பங்கைத் தருகிறேன்.

மரைக்: (கோபமாக) அது வரை நான் பொறுத்திருக்க முடியாது. பணத்தை வைக்கிறியா. அல்லது பாய் விரிக்கவா?

முதலி: அப்ப போவேன், காணும் போவேன்,

மரைக்: என்ன போகவா? அந்தக் காக்கா வல்ல நான். இன்றைக்கு ரெண்டில் ஒன்று பார்த்துக் கொண்டு தான் போவேன்.

முதலி; என்ன முடுக்கிறீர் வாலே? என்னட்ட வாள் காட்ட முடியாது, காட்டினியோ, ஒட்ட நறுக்கிப் போடுவேன்

மரைக்: இப்போ பங்கைத் தரப்போறியா இல்லையா?

முதலி: என்னய்யா? பங்கு பணம் யாருட்டயய்யா கொடுத்தாய். எங்கே கொப்பியை கொண்டுவா பார்ப்போம்.

மரைக்: அட பாவிப் பயலே, கொப்பியா கேட்கிறாய் கொப்பி? உன்னை நம்பித்தானே முதலைக் கொடுத்தேன்.

முதலி: கொடுத்ததிற்கு யாரய்யா சாட்சி?

மரைக்: அய்யோ அல்லா! சாட்சியல்லவோ கேட்கிறான்; படு பாவிப்பயல்.

முதலி: இங்கே நின்று கொண்டு கத்தினியோ, போலிசைத் தான் கூப்பிடுவேன்.

மரைக்: கூப்பிடய்யா கூப்பிடு. (அழுது கொண்டு) இராம சாமி, கண்கெட்டுத்தான் போகும். உன் கண்ணை யான் கெடுக்கா விட்டால் என் பெயர் மரைக் காரல்ல, படிக்காத என்னை ஏமாற்றியதற்கு ஆண் டவன் சும்மா விடமாட்டான். (வெளியே போகி றார்)

கண: படிக்காத முட்டாளச்சே, செய்தாலும் செய்து போடுவான். எதற்கும் முதலியார்வாள் நாமும் கவனமாகத் தான் இருக்க வேண்டும் எந்தப். புத் தில் எந்தப் பாம்பிருக்குமோ.

முதலி: பின்னே என்ன கணக்கப்பிள்ளே, தனிமையாக வந்து கேட்பதை விட்டு வெருட்டுகிறார், அல்ல வெருட்டுகிறார். கணக்கப்பிள்ளை அந்தக் கணக்குக் கொப்பியை கொண்டு வாயய்யா. (அவர் கொண்டு போய் கொடுக்க மரைக்காரின் கணக்கைக் கிழித்து நெருப்பு வைக்கிறார்) ஒரு பீடை முடிந்தது(என்று சொல்லிக் கொண்டு மேசையில் உட்காருகிறார்.)

மணிச்சத்தம் தந்தி... தந்தி... கணக்கப்பிள்ளை கொண்டு வந்து கொடுக்க முதலியார் கண்ணி லொற்றி முருகா! என்று சொல்லி உடைத்து வாசிக்கிறார்,

முதலி: அய்யோ! கணக்கப்பிள்ளை, குடி கெட்டுதய்யா, குடி கெட்டுது. நடுக்கடலில் வைத்து எல்லாம் பிடித்துப் போட்டாங்க. படுபாவிப் பயலுகள்! இரண்டு லட்சம் போயிடுச்சு (என்று சொல்லிக் கொண்டு கீழே விழுகிறார்.)

கண: மீனாட்சியம்மா! மீனாட்சியம்மா! அட அவங்கள் படத்துக்கு அல்லோ போட்டாங்கள். (முதலியாரை தூக்குகிறார். தூக்கமுடியவில்லை. வீட்டுக்குள் ஓடித் தண்ணீர் கொண்டு வந்து தெளித்து விட்டு) அந்தக் காலத்தில் அநியாயம் செய்தால் மறுபிறப்பில் கர்ட்டும். இங்கே பாருங்கோ கண்ணுக்கு முன்னே நடக்கிறது.

திரை

## காட்சி V

இடம்: **முதலியார் வீடு**

பாத்திரங்கள்: **இராமசாமி முதலியார்**
**கணக்கப்பிள்ளை**
**சிங்காரம்**
**மீனாட்சி**
**பாலு**
**வருமான வரி அதிகாரி**

முதலியார் கவலையுடன் திருவாசகம் படித்துக் கொண்டிருக்கிறார். பாலு வருகிறான்.

முதலி: (புத்தகத்தை மூடிவிட்டு) தம்பி பாலுவா வாப்பா வா: எத்தனை நாளாக உன்னை நான் பார்க்கவில்லை.

பாலு: அப்பா, நான் கேள்விப்பட்ட தெல்லாம் உண்மையா?

முதலி: என்னடா பாலு?

பாலு: அது தான் உங்கள் வீட்டை உங்கள் ஆசை நாயகிக்கு எழுதிக் கொடுத்து விட்டீர்களா?

முதலி: பாலு; நான் எது நடக்கக் கூடாதென்று எண்ணியிருந்தேனோ அது நடந்து விட்டது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அப்படிச் செய்ய வைத்தது.

பாலு: உங்களுக்கு எப்படித்தான் மனம் வந்தது. எங்களுடைய பரம்பரைச் சொத்தாயிற்றே. நீங்கள் செய்தது சரியா?

முதலி; என்னடா செய்வேன், உனக்கு அது போல் 10வீடு கட்டித்தருகிறேன்.

பாலு: நீங்கள் எப்பொழுது எங்கள் வீட்டை எழுதிக் கொடுத்தீர்களோ அன்றோடு அப்பன் பிள்ளை தொடர்பு அற்றுவிட்டது.

முதலி: பாலு, அப்படிச் சொல்லாதேயடா, எனக்கிருப்பது நீ ஒரே ஒரு பிள்ளை தானே. (அழுது கொண்டு) நீ போனால் கடைசி நேரத்தில் தண்ணீர் இறைப்பதுயார்?

பாலு: இனிமேல் கதைப்பதற்கு ஒன்றுமில்லை அப்பா. நான் போகிறேன், இந்த ஊரை விட்டே போகிறேன்.

முதலி: அடே பாலு பாலு (என்று கூப்பிடுகிறார். அந்தச் சத்தத்தைக் கேட்டு சிங்காரமும் மீனாட்சியும் உள்ளே வருகிறார்கள். அதே நேரத்தில் கணக்கப்பிள்ளையும் வருகிறார்.)

முதலி: அய்யோ! கணக்கப்பிள்ளை பாலு ஊரையே விட்டுப் போய் விட்டான் (என்று அழுகிறார்)

கண: உங்களுக்குக் கூடாத காலம்.

சிங்கா: போனால் போகட்டுமே. இன்றோடு ஒருபீடை தொலைந்தது என்று கவலையற்று இருப்பதற்கு

முதலி: அடேய்; சிங்காரம் அவன் என்னுடைய ஒரே ஒரு மகனடா.

கண: அதுக்கெங்கே தெரியப்போவுது பிள்ளைப்பாசம்.

மீனு: சிங்காரம் உனக்கேன் வீண் வம்பு?
(கணக்கப்பிள்ளை தனது இடத்திற்குப் போய் கணக்கெழுதுகிறார். முதலியார் கவலையோடு மேசையில் இருக்கிறார். இரு போலிஸ் உத்தியோகத்தர்களும், இன்கம்டெக்ஸ் ஆபீஸரும் உள்ளே வர எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்)

அருமா: ஒருவரும் இந்த இடத்தை விட்டு அசையப்படாது. கறுப்புப்பணம் இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இங்கே சோதனை போடப் போகி றோம். (எல்லோரும் விழிக்கிறார்கள். வீட்டுக்குள் போய் ஒரு பணப் பெட்டியுடன் வெளியேறுகிறார் கள்)

முதலி: அய்யோ! ஐந்து லட்சம்! ஐந்து லட்சம்! (என்று சொல்லி மயங்கி விழுகிறார்.)

(கணக்கப்பிள்ளை மெதுவாக சத்தமின்றி வெளியே போகிறார். சிங்காரமும் மீனாட்சியும் இரகசியமாக கதைத்துக் கொண்டு உள்ளே போகிறார்கள்)

முதலி; (மெதுவாக அறிவிழந்து) ஐந்து லட்சம் ஐந்து லட் சம் (என்று சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது ஒரு முகமூடி அணிந்த மனிதன் பின்னால் வருகிறான். முதலியார் திரும்பிப் பார்க்க திராவகத்தை ஊற்றி விட்டு ஓடுகிறான்.)

முதலி: ஐயோ! ஐயோ!! மீனாட்சி! மீனாட்சி! கண்ணெல் லாம் எரிகிறது. (என்று சொல்லிக் கொண்டு அந்த ரப்பட்டு கீழே விழுந்து துடிக்கிறார்.)

(சத்தத்தைக் கேட்டு சிங்காரமும் மீனாட்சியும் ஓடி வருகிறார்கள்)

மீனா: யாரோ அசிட் ஊத்தி விட்டார்கள். ஓடிப்போய் கார் கொண்டு வா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக. (சிங்காரம் ஓடுகிறான்)

திரை

## காட்சி VI

இடம்: முதலியார் வீடு

பாத்திரங்கள்! இராமசாமி முதலியார்
கணக்குப்பிள்ளை
சிங்காரம்
மீனாட்சி
உருவம்

சிங்காரமும் மீனாட்சியும் இருக்கிறார்கள். சிங்காரம் விசிலடித்துக் கொண்டு தலை சீவுகிறான் வெளியே போக.

மீனா: சிங்காரம்; முதலியார் ஆஸ்பத்திரிக்குப் போய் ஒரு மாதமாச்சே, ஒரு நாளென்றாலும் போய் பார்க்க வில்லையே?

சிங்கா: அது தர்ம ஆஸ்பத்திரி அக்கா. சாப்பாடு, மருந்து எல்லாம் ஓசியிலே கொடுப்பார்கள்.

மீனா: அதற்கில்லே; எப்படியிருக்கிறார் என்று பார்க்க வேண்டாமா?

சிங்கா: அக்கா, அப்படி லொக்கா தலையைப் போட்டால் ஆஸ்பத்திரிக்காரர்கள் அவசரமாக தந்தி அடிப் பாங்கள்.

மீனா: ஏதோ கொஞ்ச நாள் கணவன் மனைவியாக வாழ்ந் தாச்சு; அதற்காக வென்றாலும்.

சிங்கா: சீ; உனக்கென்ன பைத்தியமா? போய்ப் பார்த்தால் மனிதன் உயிரோடு இருந்தால் எங்களோடு ஒட்டிக் கொள்ள மாட்டானா? அவரிட்டே இப்பொழுது என்ன இருக்கு? ஏழுமலை எஸ்டேட் ஈட்டிலே இருக்கு, அதுவும் அருகியீடு, ஒரு பகுதி கள்ளக் கடத்திலில் போய் விட்டது. மறு பகுதி மனிதன் பூகமாகிரி பகுக்கி வைத்திருந்தான்; அதுவும் போய் விட்டது. ஒழிந்தது பீடை, என்று சும்மா இருக்காமல் .....

மீனு: என்றாலும் சரியில்லைத் தானே. ஊர் என்ன சொல்லும்.

சிங்கா: (சிரித்துக் கொண்டு) இப்பொழுது என்ன உன்னையும் என்னையும் தெய்வ பிரவிகளென்று தானே வாழ்த்துகிறது. ஊர் தூற்றட்டுமே; யார் கவலைப் படுகிறது?

மீனு: எனக்கென்னமோ மனது சரியாக இல்லை. நிம்மதி இல்லை.

சிங்கா: அதற்குத்தானே அன்றைக்கு ஒரு மருந்து கொண்டு வந்து தந்தேனே, அதில் ஒரு கிளாஸ் அடி; எல்லாம் சரியாய் போய்விடும்.

(உள்ளே போகிறான். மீனாட்சி மேசையிலிருந்த புத்தகத்தை பிரட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள். சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்க்கும் போது ஒரு உருவம் மொட்டாக்கு போட்டுக் கொண்டு நிற்கிறது)

மீனு: (பயந்து) யாரது! யாரது!! அடே சிங்காரம் இங்கே வந்து பாரடா.

உருவ: (மெதுவாக மீனாட்சியின் அருகில் வந்து கொண்டு) ஏன் அவனைக் கூப்பிடுகிறாய், என்னைத் தெரிய வில்லையா?

மீனா: உன்னை எனக்கெப்படித் தெரியும், அடேய் சிங்காரம் இங்கே கெதியா வாடா.

உருவ: உன் அன்புக் கணவன் ராமசாமி முதலியாரை தெரியும் தானே.

மீனா: அவர் தானே ஆஸ்பத்திரியில் (உருவம் அருகருகே வருகிறது) அடேய் சிங்காரம்; விரைவாய் வாடா.

சிங்கா: (உள்ளிருந்து வெளியில் வந்து கொண்டு) இது யாரது பெண் பிரசில் இருக்கிற இடத்தில் எடடா முட்டாக்கை.

உருவ: (தடுத்துக் கொண்டு) பார் மீனாட்சி பார்.

மீனா: (கீச்சிட்டு கத்துகிறாள்)

முதலி: சிங்காரம் அடேய்; உயிரோடு வந்து விட்டேன்.

சிங்கா: ஏன் இங்கே வந்தாய்? எங்கேயாவது போய் தொலைகிறது தானே, பார்க்கப் பயங்கரமாய் இருக்கே.

முதலி: அடேய் இது என்னுடைய வீடு; வந்தேன். நீ யாரடா கேட்கிறதுக்கு பரதேசிப் பயலே?

சிங்கா; (ஏளனமாக சிரித்துக் கொண்டு) அதுதானே எழுதிக் கொடுத்தாச்சே.

முதலி: மீனாட்சி இவன் சொல்லுறதைப் பார்த்தாயா? உன்னை நம்பித் தானே வீட்டை எழுதித் தந்தேன்.

மீனா: அதற்கு இப்போ என்னே? தம்பி சொல்லுவது சரி தானே?

முதலி: அடிப்பாவி; மீனாட்சி; நீயுமா இப்படிப் பேசுகிறாய்? பசையிருக்கு மட்டும் அட்டை மாதிரி இரண்டு பேரும் உரிஞ்சினீர்கள்.

(பெருமூச்சு விட்டு) முருகா! அட்டை உங்களிலும் பார்க்க மேலானது; அது ரத்தத்தை மட்டும் குடித்து விட்டு போய்விடும். நீங்கள் ரத்தப் பிசாசுகள்.

சிங்கா: (ஏளனமாக சிரித்துக் கொண்டு) இதுதான் உலகம் முதலியார்வாள்.

முதலி: அட பாவி; உங்களை நம்பி ஒரு மகளை பறிகொடுத்தேனே.

சிங்கா: நான் சொன்னேனா? செய்யுறதை செய்து விட்டு என்மேலே யல்லலோ பழி போடுகிறாய். நீர் சின்ன பபாவா? கிழட்டு தாட்டா.

முதலி: அய்யோ! மீனாட்சி அவன் பேசுகிறதைப் பார்.

மீனா: தம்பி சொல்லுவதில் என்ன தப்பு. இனிமேல் இந்த வீட்டில் உன்னை வைத்திருக்க முடியாது. வெளியே போ.

முதலி: நான் இந்த நிலையோடு எங்கே மீனாட்சி போக. (அழுகிறார்)

சிங்கா: அட முதலியார்; அரசாங்கம் இப்படிபட்டவர்களுக்கென்று தான் அநாதை இல்லம் கட்டி வைத்திருக்கு; ஏதாவது ஒன்றில் போய் சேரவேண்டியது தானே.

முதலி: (கோபமும் அழுகையுமாக) அடேய் சிங்காரம்; எத்தனையோ அநாதை இல்லங்களை கட்டிக் கொடுத்தவனடா நான்.

சிங்கா: (சிரித்துக் கொண்டு) இப்படி வருமென்று முன்பே தெரியுமோ?

முதலி: அடேய் சிங்காரம்; மீனாட்சி நான் போவதற்கு முன்னால் ஒரு முடிவு கட்டிக் கொண்டு தான் போவேன், அதற்கு முன் இந்த வீட்டை விட்டு போமாட்டேன். என்று சொல்லி ஓட வர மீனாட்சி வீட்டுக்குள்ளோடி கதவை பூட்டி விடுகிறாள், சிங்காரம் தள்ளி விடுகிறான் கீழே விழுகிறார்.

சிங்கா: அக்கா; அவனுக்குப் பைத்தியம் அங்கொடைக்குத் தான் அனுப்ப வேண்டும்.

மீனா: (வீட்டுக்குள் இருந்து கொண்டு) தம்பி சிங்காரம் நீ உள்ளே வாடா, பைத்தியம் ஏதாவது செய்து விடும்.

முதலி: அழுது கொண்டு; எனக்கா பைத்தியம்; அடகடவுளே எனக்கா பைத்தியம். கடவுளே ஏன் கூப்பிட வேண்டும். நான் செய்த கொடுமைகளுக் கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா, படியாத ஏழை கூலிக் காரர்களை மோசம் செய்தேன், ஏழை அழுத கண்ணீர் சும்மா விடுமா. பாடியாக அப்பாவி மரைக் காரை ஆசை காட்டி மோசம் செய்தேன். கள்ளாத வயதில் இரண்டாம் தாரம் முடித்தேன். எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். இது நல்ல முடிவு. அய்யோ! மீனாட்சி பசிக்கிறதே; ஏதாவது சாப்பிடத்தா. ஆஸ்பத்திரிக்கு போன நாளிலிருந்து சோற்றையே கண்ணாலே காணவில்லை.

மீனா: (மீனாட்சி வெளியில் வரப்பயந்து கோப்பையில்சோற்றைப் போட்டு கதவடியிலிருந்து தள்ளி விடுகிறாள்.)

முதலி: (ஓடிப் போய் கையில் எடுத்து அவசரமாக சாப்பிட்டு துப்பி விட்டு) என்ன கறி தெரியுமா?

கோழிக் கறி; உடம்புக்கு நல்லது. (அழுகிறார்) அய்யோ! வட்டக்காய் கறி, அடி மீனாட்சி கோழிச் சூப்பு, கோழிக் கறி தந்த காலம் போச்சு, உன்னை நான் வாழ விடப் போவதில்லை.

சிங்கா; (நித்திரையால் எழுந்து வந்து) அடே சனியன் எங்களை நிம்மதியாக தூங்க விட மாட்டியா?

முதலி: எசமான் நிம்மதியாக தூங்க போகிறார், தூங்கு போய் தூங்கு. (தயவாக) சிங்காரம் படுக்க ஓர் பாய் கொடு.

சிங்கா: (ஒரு பீத்தல் பாயை எறிந்து கொண்டு இந்தா படுத்துத் தொலை

முதலி; (பாயை எடுத்துக் கொண்டு) பஞ்சனை மெத்தை. பஞ்சனை மெத்தை. உரத்துச் சிரிக்கிறார்:
(இந்த நேரத்தில் கணக்கப்பிள்ளை வருகிறார்)

முதலி: கணக்கப்பிள்ளையா வாப்பா வா, என்னைத் தெரிகிறதா?

கண: என்ன தெரிகிறதாவது? தெரிகிறது, உங்கள் உப்பை தின்டு வளர்ந்தவன் தெரியாமலா போய்விடும்.

முதலி: இந்த உலகத்தில் நீ ஒருவன் மட்டும் எனக்காக பேசுகிறாய், ஆசை தீரப் பேசு (அழுது கொண்டு) எனக்குப் பைத்தியமென்று சிங்காரமும் மீனாட்சியும் சொல்லுகிறார்கள். என்னை நாளைக்கு அங்கொடைக்கு அனுப்பப் போறார்கள்.

கண: (கண்களைத் துடைத்துக் கொண்டு) முதலியார் வாள் ஏழை தான்; இதயமென்று எனக்குண்டு நீங்கள் என்னோடு வீட்டுக்கு வாருங்கள்.

முதலி: வேண்டாம், வேண்டாம், நான் செய்த பாவம் என்னோடு போவட்டும்:

கண: தான் தான் செய்தவற்றை தான் தான் அனுப விக்க வேண்டும். தலையெழுத்து யாரால் மாற்ற முடியும். (வெளியே போகிருர்)

முதலி: எனக்கா பைத்தியம், அடேய் சிங்காரம் சத்தியமா கச் சொல்லுகிறேன். எனக்கு பைத்தியமில்லையடா முருகா! இவர்களை எப்படித்தான் நம்ப வைப்பது

சிங்கா: (வெளியே வந்து) உலகத்தில் எந்தப் பைத்தியமா வது, தனக்கு பைத்ய மென்பதை ஒத்துக்கொள் ளுமா? கத்து, கத்து? தவளை மாதிரி கத்து. நாளைக்கு அங்கொடைக்கு அனுப்பி வைக்கிறேன்.

திரை

## காட்சி VII

இடம்: முதலியார் வீடு

பாத்திரங்கள்: இராமசாமி முதலியார்
சாஸ்திரியார்
மீனாட்சி
சிங்காரம்
ஒருவர்

சிங்காரம் மீனாட்சி வீட்டுக்குள்ளே சாஸ்திரியார் குறி வைத்துக் கொண்டு சந்தனம் பொட்டு. தோளில் சால்வை, கமக்கட்டில் குடை, காலில் செருப்பு ஆகியவற்றுடன் வருகிறார்.

சாஸ்: யாரங்கே யாரங்கே! முதலியார்வாள்; முதலியார்! வாள்,

சிங்கா: (உள்ளிருந்து கொண்டு) யாரது? யாரது?

சாஸ்: நான் தான் முதலியார் வாழ் என்னைத் தெரியவில்லையா?

சிங்கா: ஒகோ! சாஸ்திரியாரா; வாரும், வாரும் அக்கா அக்கா! நம்மட சாஸ்திரியார் வந்திருக்கிறார்.

மீனு: (வெளியே வந்து) வாரும்; வாரும் இரும் வெத்திலை போடுங்கோ (என்று சொல்லி தட்டத்தை நீட்டுகிறாள்)

சாஸ்: (செருப்பை ஒரு மூலையில் கழற்றி விட்டு குடையை ஒரு மூலையில் வைத்து விட்டு வெற்றிலை போட்டுக்

கொண்டு) கனநாளாக நான் இந்தப் பக்கம் வர வில்லை. வெளியூர் போயிருந்தேன். ஒருக்கால் முதலி யார் வாளை பார்த்து விட்டுப் போவோம். அதோடு நான், அவர் குடும்ப சாஸ்திரியாயிற்றே. எங்கே முதலியார்வாளை காணவில்லை.

சிங்கா: அவரா? அவர் நுவரெலியாவுக்கு சுகமெடுக்கப் போய் விட்டார் வரக் கனநாளாகும்.

சாஸ்: அவருக்கு இப்பொழுது வெள்ளி திசையாச்சே, சுக மனுபவிக்கிற கர்லம் தானே. வெள்ளியிருக்கிறுன் பாருங்கோ. வெள்ளி, அவனுடைய குணமே அது தான்.

சிங்கா: ஓகோ! அது தான் எங்களையெல்லாம் விட்டு விட்டுப் போய் சுகமெடுக்கிறுர்.

சாஸ்: இனிமேல் தான் அவருக்கு நல்ல காலம். வெள்ளி திசையில் வெள்ளி புத்தி வருகிறது. ஒரே எழுப்பம் தான்.

மீனு: அது இருக்கட்டும், சாஸ்திரியார் தம்பியிண்ட கை யை ஒருக்கா பாருங்கோ. எப்ப கலியாணம் நடக்கு மென்று

சாஸ்: ஓம் நல்லா பாப்போமே. நல்லா பாப்போம் கொண்டு வா தம்பி கையை.

(கையைப் பார்க்கிறுர்) இந்த ரேகையின் பலன்படி எப்பவோ கலியாணம் நடந்திருக்க வேண்டுமே.

மீனு: என்ன சாஸ்திரி இன்னும் கலியாணமே ஆகவில்லை நீங்கள்...

சாஸ்: நான் சொல்லவில்லையே. ரேகையல்லவோ சொல் லுது? அதோடு பாருங்கோ ஆண்களுக்கு இந்த நாளை யில் கலியாணத்தை பற்றி சொல்லுவது கஷ்டம். இவனும் ஆண்பிள்ளை தானே பாருங்கோ.

சிங்கா: சரி; சரி. அது போவட்டும். இனிமேல் எனக் கெப்படி காலம் பாருங்கோ.

சாஸ்: (யோசித்து விட்டு) ஒரு திசாநாதன் வருகிறான். அதி விரைவில் அரசாங்கத்தின் விருந்தாளியாகப் போகிறீர்.

சிங்கா: அக்கா, மறந்து போனேன். இன்றைக்கல்லோ சில நண்பர்கள் பாட்டிக்கு வருவதாகச் சொன்னார்கள்.

மீனா: கொடுத்தால் போவுங்கோ.
(மூன்று பேர் உள்ளே வருகிறார்கள்)

சிங்கா: இப்பத்தான் உங்களைப் பற்றிக் கதைத்துக்கொண்டு இருக்கிறோம் வாருங்கோ! இருங்க.

ஒருவ: அட எங்கட சாஸ்திரியாரும் வந்திருக்கிறார். எப்படி சாஸ்திரியார் சுகம்.

சாஸ்: நான் சும்மா.........

மீனா: (ஒரு தட்டில் சாராயப் போத்தல், கிளாஸ் கொண்டு வருகிறாள். சிங்காரம் எழுந்து போய் வேண்டி வந்து பரிமாறுகிறான். சாஸ்திரியும் எழுந்து போய் ஒரு மூலையில் நிற்கிறார்.

ஒருவ: என்ன சிங்காரம் சாஸ்திரியாரை விட்டு விட்டாய்.

சாஸ்: அய்யோ! தம்பி, எனக்கு இந்த நல்ல பழக்கமில்லை.

ஒருவ: இதென்ன சாஸ்திரியர், நஞ்சா இல்லா விட்டால் மாமிசமா? கொஞ்சம் குடித்துப் பாரும். (ஒரு கிளாஸில் வார்த்துக் கொடுக்கிறார்)

சாஸ்: பழக்கமில்லைத் தான். மாமிச மில்லைந்தானே? என்றாலும் பார்ப்போம்.
(என்று வேண்டி மணந்து பார்த்து விட்டு முகத்தைச் சுழித்து மூக்கைப் பிடித்துக் கொண்டு வாய்க்குள் ஊற்றுகிறார்)

(இந்த நேரத்தில் முதலியார் கோபத்தோடு மொட்டாக்கு போட்டுக் கொண்டு ஒரு கத்தியுடன் வருகிறார்)

**முதலி:** அடேய் சிங்காரம்! மீனாட்சி உங்களை நான் வாழ விடப் போவதில்லை. நீயும் சேர்ந்து விட்டாயா மீனாட்சி அசையாதே நில்லடி.

(என்று சொல்லிக் கொண்டு கத்தியால் குத்த ஓட அவள் ஓடிப்போய் சிங்காரத்திற்கு பின் மறைய சிங்காரம் சட்டை பொக்கட்டிலிருந்த பிஸ்டலால் சுட்டு விடுகிறான். முதலியார் ஐயோ! என்றுக் கத்திக் கொண்டு கீழே விழுகிறார்.

சாஸ்திரியார் வெளியே ஓடிப்போய் போலிஸ் அதிகாரியுடன் வருகிறார். அவர்கள் சிங்காரத்திற்கு கை விலங்கு மாட்டி அழைத்து செல்லுகிறார்கள். வீடு ''வரையுறவு'' என்ற பாடல் பின்னணியில் கேட்கிறது.)

திரை

முற்றும்.

திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.



இன்று யாழ் மத்திய கல்லூரியில் அதிபராக இருக்கும் இந் நாடக நூலாசிரியர் திரு நா. இராசரத்தினம் (B. A. Cey Dip- in- Ed) கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலிருந்து நாடகத்துறையில் ஈடுபாடுடையவராக விளங்கி வந்துள்ளார் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையினால் எழுதப்பட்டு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் தயாரித்த நாடகங்களில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்ததோடு வானொலி நாடகங்களிலும் நடித்துள்ளார்.

பல்கலைக் கல்வியை முடித்த பின் மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் ''இது தான் முடிவு'' இது தான் உலகம்'' ''கணக்கர் சுந்காம்பிள்ளை'' போன்ற சமூக நாடகங்களை எழுதி தயாரித்ததோடு அவரே முக்கிய பாத்திரங்களிலும் நடித்துள்ளார் பின்பு யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியாராக இருந்த காலத்தில் 'இது தான் முடிவு' என்ற பரிசு பெற்ற நாடகத்தை 1974ம் ஆண்டு யாழ் வீரசிங்க மண்டபத்தில் மேடையேற்றினார் யாழ் மத்திய கல்லாரியில் நடந்த நாவலர் நூற்றாண்டு விழாவில் 'நல்லை தந்த நாவலன் என்ற ஓரங்க நாடகத்தை எழுதி நாவலராக நடித்த பெருமையும் இவருக்குண்டு

ஏனைய அச்சில் வராத இவரது நாடகங்கள் இது தான் உலகம்' 'கணக்கர் சுந்தரம்பிள்ளை' தொடர்ந்து அவரது எழுத்துப் பிரதியாக இருக்கும் நாடகங்கள் வெளிவர வேண்டுமென்பது எனது அவாவாகும்

கண்ணப்பர்
மாத்தளை